* **Sri T. ANANTA PAI** :—" Mr. Speaker, Sir, I am sorry, I have to oppose this amendment and also request the Government not to accept it for this simple reason. It is presumed that all the matadhipatis belong to the same class and there may not be any person amongst them, whom we or the society can hold as sacred and who deserve our regard and respect. It is also presumed that the disciple when he gives gifts, gives it to the math. The Supreme Court, while going into this question, has taken the attitude that there may be some cases where custom and usage might lay down that such '*pathakanikas*' must become the property of the math itself, and in other cases where there is no such custom, the gift made by the disciple goes to the matadhipati. It is his absolute property and he can deal with it as he likes. By taking this attitude, the Supreme Court has invalidated that section. The insistence on the matadhipati to keep accounts of receipts and payments of '*pathakanikas*' would amount to interference with his personal rights and now this is what is sought to be done in this amendment. Fortunately, the Government have accepted the interpretation of the Supreme Court and consented to allow the matadhipati to keep '*pathakanikas*' for himself and dispose of them as he likes. Only he must maintain accounts of receipts and the Government are not going to be bothered how exactly they are disposed of. That being so, this amendment wants to contravene the judgment of the Supreme Court completely by expropriating the personal gifts that may be made to the matadhipati. It is not to

be presumed that when people go and make their offerings as '*pathakanikas*', they do so irresponsibly. Nowadays, it is not so. Every matadhipati is not able to get '*pathakanikas*' as easily as in the olden days, because people know whom they should respect and whom they should not. If some maths or matadhipatis have maintained a very high position in society with a great following, it would not be proper on our part to say that such institutions must not be encouraged or such persons must not be respected and all persons must be treated alike. But I would rather say that these personal gifts that are made to the matadhipati are to be spent in his discretion and he can dispose of them as he likes. A matadhipati has no family of his own maintain. But the whole world may be his family for the matter of it and I know instances where good matadhipati has been very charitable and has given scholarships to deserving students. Many people who seek his assistance for money are being helped by him. I know of instances where they have helped the marriages of poor girls. Should such matadhipatis be made to seek the approval of the Hindu Religious Endowment's Commissioner for all this? So, I would suggest that a certain amount of discretion be given to them and they may be allowed to keep these '*pathakanikas*' to themselves because these offerings are made voluntarily by their disciples. We should not also interfere even with the maintenance of such accounts because in the ordinary course there may not be anything wrong in anybody maintaining accounts of receipts and disbursements but, if it leads to harassment, I would rather wish that it is avoided."

* SRI P. K. GOPALAKRISHNAN :—" Sir, I cannot support the argument raised against the amendment, as if the gift made as '*pathakanika*' is a gift made to the person and not to the post. I maintain that the gift is given to the post and not to the person. Of course, the matadhipati has no family to maintain but has to render some other services and for the services rendered by him, certainly remuneration will be given to him. Among other expenses of the math, this can also be included and therefore, there is no necessity for making it a personal gift and allowing him to spend it as he likes. Certainly, it can be put to more beneficial public use and, therefore, this amendment can be accepted."

*SRI AR. AR. M. CHOKALINGAM CHETTIAR :—" கனம் சபா நாயகர் அவர்களே, எதிர்கட்சியாரால் கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்தத்தை எதிர்த்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

" மடாதிபதிகள் பாதகாணிக்கையாக வாங்கும் பணத்திற்கு கணக்கு வைத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்ல யாரும் முன்வர மாட்டார்கள். ஆனால், அவர்கள் அந்தப் பணத்தை நல்ல காரியங்களுக்குச் செலவழிக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்த்துக்கொள்வதற்கு அறநிலையப் பாதுகாப்பு கமிஷனரும், பிரதேசக் கமிட்டி போன்ற ஸ்தாபனங்களும் இப்பொழுது அமைக்கப்பெற்றிருக்கின்றன. பல இடங்களில் மடாதிபதிகள் மடங்களை நன்றாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஏதோ சினிமாக் கதைகளில் பார்த்ததைப் பற்றி பிரமாதமாகச் சொல்லி

7th August 1954] [AR. AR. M. Chokalingam Chettiar]

எதிர்ப்பது நியாயம் அல்ல. திருவண்ணாமலையிலுள்ள ஈசான்ய மடம், குன்றக்குடி, கோயிலூர், மதுரை-தர்மபுரம் போன்ற மடத்துத் தலைவர்கள் பெரிய பெரிய நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஆகையால், மடாதிபதிகளாக இருப்பவர்கள் செய்வதெல்லாம் தவறு என்று சொல்வது பொருத்தமானதல்ல என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.''

* THE HON. SRI B. PARAMESWARAN :—''Sir, this was perhaps one of the most important clauses which were discussed at length by the Select Committee. The Supreme Court has observed that ordinarily a Mahant has absolute power of disposal over '*pathakanikas*' except when he dies without making any disposition, in which contingency, it is regarded as the property of the math. It has also observed that there may be some cases in which such gifts are regarded as gifts to the institution; but the general rule is otherwise. The Supreme Court held sub-section (1) of Section 55 of the original Act to be invalid as it does not contain a saving provision that this will apply only where there is custom or usage in a particular institution that the property belongs to the math. Therefore, it is to be taken that the power of the matadhipati over '*pathakanikas*' cannot be restricted except under the usage of the institution. As drafted in the Bill, this Clause is in conformity with the judgment of the Supreme Court. Therefore, I oppose this amendment.''

SRI M. KALYANASUNDRAM :—'' கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கட்சியைச் சேர்ந்த இரண்டு அங்கத்தினர்கள் மடாதிபதிகளின் மீது வைத்திருக்கின்ற நல்ல நம்பிக்கையையும் மரியாதையையும் நான் பாராட்டுகின்றேன். மடாதிபதிகளுடைய நடத்தை அல்ல இப்பொழுது விவாதத்தில் இருக்கிறது. மடாதிபதிகளைப் பற்றி பேசின அங்கத்தினர்களுக்கும், இந்தச் சபையில் இருக்கக்கூடிய இதர அங்கத்தினர்களுக்கும் மடாதிபதிகளைப் பற்றி அவரவர்களுடைய சொந்தக் கருத்து ஒன்று இருக்கும். ஆனால் அவர்கள் பகிரங்கமாக ஒரு விதமாகப் பேசினாலும் கூட அதைப்பற்றி நான் இப்பொழுது விவாதத்தில் இறங்கவில்லை. பாதகாணிக்கை சமர்பிக்கக்கூடியவர்கள், நம்முடைய நண்பர் ஸ்ரீ T. அனந்த பாய் அவர்கள் சொல்லியது போல, அந்தந்த மடத்துத் தலைவர்கள் மீது இருக்கக்கூடிய நம்பிக்கையைக் கொண்டு சமர்ப்பிக்கிறார்கள். அதே எண்ணத்தோடு நடக்கக்கூடிய மடாதிபதிகள் இதை ஆட்சேபிக்கவேண்டிய அவசியம் இல்லை. அவர்களுடைய உயர்ந்த எண்ணத்தில் செலவினங்களுக்கு கணக்கு வைத்துக்கொள்வதற்கு ஆட்சேபிக்கமாட்டார்கள். பாதகாணிக்கையாக தங்களுக்கு கொடுக்கப்படும் பணத்தைக்கொண்டு தாங்கள் செய்யும் நல்ல நல்ல காரியங்களுக்கெல்லாம் கணக்கு கொடுப்பதன் மூலம் அவர்கள் ஜனங்களிடையே தங்களுடைய நல்ல எண்ணத்தை நிரூபித்தவர்களாகிறார்கள். நல்ல முறையில் நடந்துக்கொள்ளக்கூடிய மடாதிபதிகள் வரவுசெலவுக் கணக்கு வைத்துக்கொள்வதை ஆட்சேபிக்கமாட்டார்கள். ஆகவே, இதை ஆட்சேபிக்கக் கூடிய எண்ணமே எதிலிருந்து வருகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. இதை ஆட்சேபிப்பதால், இப்படிப்பட்ட பணமானது துர்விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத்தான் நிரூபிக்கிறது. நாங்கள் கேட்பதெல்லாம், பாதகாணிக்கைப் பணமானது எப்படி விநியோகிக்கப் படுகிறது என்பதுதான். இது அவர்களுடைய உரிமையில் தலையிடுவதாகாது. இன்றைய அரசியல் சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாதகாணிக்கை சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டு கொடுத்த தீர்ப்புக்கு இந்தத் திருத்தமானது முரணாக இருக்கிறதென்று சொல்ல முடியாது. வரவு செலவுக் கணக்கை மடாதிபதிகள் அறநிலைய கமிஷனரிடம் சமர்ப்பிப்பதால்

எந்த விதமான பாதகமும் ஏற்பட்டுவிடாது; அவர்களுடைய உரிமை எந்தவிதத்திலும் பாதிக்கப்பட்டுவிடாது; சுப்ரீம் கோர்ட்டு கொடுத்த தீர்ப் பின்படியும் செல்லும் என்று நாங்கள் கருதுகிறோம். மடாதிபதிகளு டைய நடத்தையைப்பற்றி விவாதிக்காமல் என்னுடைய திருத்தத்தை இந்தச் சபை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின் றேன்."

1–10 p.m. MR. SPEAKER :—" The question is—

'*For* the words occurring after the word "namely" in line 3, *substitute* th following :—

" 55. (1) Notwithstanding any custom or usage to the contrary every gift of property or money made as '*pathakanika*' to the trustee of any math or to the head of any religious institution shall be deemed to have been made to the math or the religious institution.

(2) The trustee or the head of a math or religious institution shall be entitled to spend for purposes connected with a math or religious institution any '*pathakanika*' refered to in sub-section (1).

(3) The trustee or the head of a math or religious institution shall keep regular accounts of all receipts and disbursements of the nature referred to in sub-sections (1) and (2) and shall cause such accounts to be produced before the Commissioner or any person authorised by him in his behalf whenever so required." ' "

The amendment was put and lost.

Clause 11 was put and carried.

Clause 12.

MR. SPEAKER :—" The motion is—

' That Clause 12 do stand part of the Bill.' "

SRI M. KALYANASUNDRAM :—" Mr. Speaker, Sir I move—

' For *the existing Clause* 12, substitute the following :—

"12. *Substitution of new Section for Section* 56, *Madras Act XIX of* 1951.—For Section 56 of the principal Act, the following shall be substituted :—

' 56 (1) *If the Commissioner has reason to believe that the property of trust funds of the math are mismanaged or are used for purposes other than the purposes of the math and is satisfied that it is necessary in the interest of their administraion to take action under this section, he may require the trustee to appoint a competent person as manager and in default of such appointment, the Commissioner may himself make the appointment.*

(2) *The manager so appointed shall not be liable to be punished or removed from office without the consent of the Commissioner.*

7th August 1954] [Sri M. Kalyanasundram]

(3) The manager appointed under sub-section (1) *shall be subordinate to the trustee of the math and shall, in addition to the trustee, be responsible for the due submission to the Commissioner of the registers, accounts and budgets of the math, and also for the performance of other statutory duties imposed upon the trustee by or under this Act.' '' '*

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னையைப்பற்றி செலக்ட் கமிட்டியில் நீண்டநேரம் விவாதிக்கப்பட்டு என்ன காரணத்தினாலோ செலக்ட் கமிட்டி இதை நிராகரித்துவிட்டது. அங்கே என் ஆட்சேபணையைக் குறித்துக்கொடுத்திருக்கிறேன். அதையொட்டித்தான் இப்பொழுது இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். கமிஷனருக்கு ஒரு மடத்தினுடைய நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவில்லை என்று தோன்றினால் ஒரு மானேஜரை நியமிக்கும் பொறுப்பை, அதிகாரத்தை கமிஷனருக்கு அளிக்கவேண்டும். கமிஷனர் தன் அதிகாரத்தை சரியாக பிரயோசனப்படுத்துகிறாரா என்பது மற்றொரு விஷயம். ஏதாவது ஒழுங்கீனமான காரியங்கள் நடந்தால் சர்க்காரும், இந்தச்சபையும் குறுக்கிட்டு ஒரு அபிப்பிராயம் சொல்லித் தலையிடுவதற்கு ஒரு சந்தர்ப்பமாவது ஏற்படுமென்பதை முன்னிட்டுத்தான், ஒரு மடத்தினுடைய அலுவல்கள் ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை என்றால் கமிஷனர் ஒரு நிர்வாக அதிகாரியை—மானேஜரை—நியமிக்க அதிகாரம் கொடுக்கவேண்டுமென்பதுதான், நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தம். இது புதிது அல்ல. இது 1951-ம் வருஷத்தில் கொண்டுவந்த மசோதாவில் இருக்கக்கூடியது. சுப்ரீம் கோர்ட் அதனுடைய தீர்ப்பில் கொடுத்திருப்பது என்னவென்றால்: 'இந்த அதிகாரம் மிக அதிகமானது' என்பதுதான். இந்த அதிகாரத்தை எவ்விதம் உபயோகப்படுத்தலாம் என்பதை கமிஷனரே வரையறுத்துவிடலாம். இந்த சட்டத்தில் ஒரு விதியை ஏற்படுத்தி மடங்களில் ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு கமிஷனருக்கு அதிகாரத்தைக்கொடுத்துவிடலாம். அதற்காக இந்த செக்ஷனையே அகற்றிவிட வேண்டிய அவசியமில்லை. 56-வது செக்ஷனையே அகற்றவேண்டும் என்பதை நான் ஆட்சேபிக்கிறேன். அதனால்தான் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri S. RAMALINGAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, **1-13**
இப்பொழுது ஸ்ரீ கல்யாணசுந்திரம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத் **p.m.**
தத்தை ஆதரித்துப்பேசும்போது இந்தத் திருத்தம் செலக்ட் கமிட்டியில் கொண்டுவந்தும் அது ஏன் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்பதை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

'Where, in the case of any such institution having a hereditary trustee or trustees, the Commissioner after notice to such trustee or trustees and after such enquiry as he deems adequate, considers, for reasons to be recorded, that the affairs of the institution are not, and are not likely to be, properly managed by the hereditary trustee or trustees, the Commissioner may, by order, appoint such number of non-hereditary trustees as he thinks necessary, so that the total number of trustees does not exceed five.'

பரம்பரையாக இருக்கும் டிரஸ்டிகள் சரியாக நிர்வாகம் நடத்தவில்லையானால் கமிஷனரே அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்தபின் புதிய டிரஸ்டிகளை நியமிக்கலாம் என்று ஒரு திருத்தம் இந்த மசோதாவில் கிளாஸ் 9-ல் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதேமாதிரி மடத்தின் சொத்துக்களை சரியானபடி ஒதுக்கி குறிப்பிட்ட காரணத்திற்காக செலவு செய்யாது தங்களின் சொந்தச் செலவுக்கு உபயோகப்படுத்துவார்களேயானால், அதைப்பற்றி கமிஷனரே தீர விசாரித்து—டிரஸ்டி தவறாக நடந்தாலும் சரி, அவரின் நிர்வாகம் ஊழல் நிறைந்ததாக இருந்தாலும்சரி—ஒரு மானேஜரை நியமிக்க கமிஷனருக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும். பரம்பரையாக இருக்கக்கூடிய தர்மபுர ஆதினத்தில் எந்தவிதமான தவறுகள் ஏற்பட்டபோதிலும் ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. இதற்காகத்

சட்டத்தில் ஒரு விதி இயற்றப்பட்டிருந்தால் எந்த கோர்ட்டிலும் அவர்கள் எதிர்த்து போராட முடியாமல் இருக்கமுடியும். பல ஆதினங்களில் இந்தப் பண்டாரச்சன்னதிகள் பொறுப்பில்லாமல் நடந்துகொள்ளுகிருர்கள். அப்படிப்பட்ட இடங்களில் கமிஷனர் தலையிட்டு அந்த மடாதிபதிகளுக்கு நோட்டீஸ் கொடுத்து அவர்களை நீக்கவேண்டும். பிறகு ஒரு மானேஜரை அமர்த்துவதற்கு சர்க்கார் அனுமதி அளிக்கவேண்டும். இதற்கு ஏற்றவாறு சட்டமியற்றினுல்தான் அதை ஹைகோர்ட்டும் சுப்ரீம் கோர்ட்டும் ஒற்றுக் கொள்ளும்படியாக இருக்கும். ஆதலால் இப்பொழுது கொண்டுவந்திருக்கும் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.''

* THE HON. SRI B. PARAMESWARAN :—'' Mr. Speaker, Sir, both the High Court and the Supreme Court have held Section 56 to be invalid. Clause 9 of the Bill amending Section 39 of the principal Act is to a certain extent different from Section 56. I, therefore, oppose the amendment but I can, however, give this assurance to the hon. Member, Sri M. Kalyanasundram, that when we bring forward a comprehensive Bill, we will go into it in detail and see how far the hon. Member's suggestions can be implemented.''

MR. SPEAKER :—'' The question is—

' *For* the existing Clause 12, *substitute* the following :—

'' 12 *Substitution of new section for section* 56, *Madras Act XIX of* 1951.—For section 56 of the principal Act, the following shall be substituted :—

' 56. (1) If the Commissioner has reason to believe that the property of trust funds of the math are mismanaged or are used for purposes other than the purposes of the math and is satisfied that it is necessary in the interest of their administration to take action under this section, he may require the trustee to appoint a competent person as manager and in default of such appointment, the Commissioner may himself make the appointment.

(2) The manager so appointed shall not be liable to be punished or removed from office without the consent of the Commissioner.

(3) The manager appointed under sub-section(1) shall be subordinate to the trustee of the math and shall, in addition to the trustee, be responsible for the due submission to the Commissioner of the registers, accounts and budgets of the math, and also for the performance of other statutory duties imposed upon the trustee by or under this Act.'' ' ''

The amendment was put and lost.

Clause 12 was put and carried.

Clauses 13 and 14 were put and carried.

7th August 1954]

Clause 15.

MR. SPEAKER :—" The motion is—

' That Clause 15 do stand part of the Bill.' "

* THE HON. SRI B. PARAMESWARAN :—" Mr. Speaker, Sir, I beg to move—

' (1) *In sub-section* (1) *of Section* 76 *amended by Clause* 15, after *the words* " *and their officers* ", insert *the words* " *and for defraying the expenses incurred on account of such services* ", *and*

(2) Renumber *the existing Clause* 15 *as sub-clause* (1) *of that clause and* insert *the following as sub-clause* (2) :—

" (2) *At the end of the said Section* 76, *the following Explanation shall be added* :—

' Explanation.—*Any religious institution, the annual income of which is less than two hundred rupees, shall not be liable to pay any contribution to the Commissioner as required by sub-section* (1) ' " ' "

MR. SPEAKER :—" Motion moved—

' (1) In sub-section (1) of section 76 amended by clause 15, *after* the words " and their officers ", *insert* the words " and for defraying the expenses incurred on account of such services," and

(2) *Renumber* the existing Clause 15 as sub-clause (1) of that clause and *insert* the following as sub-clause (2) :—

" (2) At the end of the said Section 76, the following Explanation shall be added :—

' *Explanation.*—Any religious institution, the annual income of such is less than two hundred rupees, shall not be liable to pay any contribution to the Commissioner as required by sub-section (1).' " ' "

SRI S. RAMALINGAM :—" Mr. Speaker, Sir, I move—

' *In the proposed new sub-section* (1), for *the words* " *five per centum* ", substitute *the words* " *ten per centum* ".' "

SRI K. P. GOPALAN :—" Mr. Speaker, Sir, I second the amendment."

MR. SPEAKER :—" Motion moved—

' In the proposed new sub-section (1), *for* the words " five per centum," *substitute* the words " ten per centum." ' "

SRI M. KALYANASUNDRAM :—" Mr. Speaker, Sir, I move—

' *In the proposed new sub-section* (1), for *the words* " *five per centum* ", substitute *the words* " *seven and a half per centum* ".' "

SRI K. P. GOPALAN :—" Sir, I second the amendment."

MR. SPEAKER :—" Motion moved—

' In the proposed new sub-section (1), *for* the words " five per centum ", *substitute* the words " seven and a half per centum.' "

1-18 p.m. SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபைத்தலைவர் அவர்களே, இப்போது கொண்டுவந்திருக்கும் சட்டத்தின் 16-வது கிளாஸின் மொத்தமான நோக்கம் கமிஷனர் ஒரு சுயேச்சையாக விளங்கக்கூடிய அதிகாரியாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் அவருடைய பொறுப்பிலே ஒரு நிதியை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது என் அபிப்பிராயம். ஒரு மடத்தின் வருமானத் தொகையில் சர்க்கார் செய்யும் தொண்டுக்காக 5 சத விகிதம் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. இது மிகமிக குறைவானது. சிப்பந்திகளுக்கு செய்துகொடுக்கக் கூடிய வசதியை இவர்களுக்கு —மடத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும்,—செய்துகொடுக்கவேண்டும் அதற்காக மசோதாவில் 5 சத விகிதம் என்பதற்குப் பதிலாக 7½ சத விகிதம் என்று மாற்றவேண்டுமென்ற என் திருத்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் அரசாங்க நிதிக்கு ஒரு குந்தகமும் ஏற்பட்டுவிடாது. அதேசமயத்தில் மடங்களில் இருக்கும் சிப்பந்திகளுக்கு உதவி அளித்தவர்களாவோம். இந்தக் கோவில் சொத்துக்களின் உபரி நிதியிலிருந்து ஏழைப்பிள்ளைகளுக்கு கல்வி வசதி செய்து கொடுக்கவும், யாத்ரீகர்களுக்கு சுகாதார வசதிகள் அளிப்பதற்கும் உபயோகப்படுத்தலாம். இப்பொழுது நான் 5 சதவிகிதத்திற்கு பதிலாக 7½ சத விகிதம் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இவ் வரவு செலவு கணக்கை எப்படி நிர்வகிக்கவேண்டுமென்பதை அடுத்த 16-வது கிளாஸிலே, பேசுகிறேன். ஆகையால் இந்தத்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

1-20 p.m. SRI S. RAMALINGAM :—" கனம் சபா நாயகர் அவர்களே, என்னுடைய திருத்தமானது எண்டோமெண்ட் வருமானத்திலிருந்து பத்து சத விகிதம் எண்டோமெண்ட்டு நிர்வாகத்திற்கு ஒதுக்க வேண்டும் என்பது தான். ஏன் பத்து சத விகிதம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லுகிறேன் என்றால் கனம் கலியாணசுந்தரம் சொல்லிய காரணங்களோடு இப்பொழுது எண்டோமெண்ட்டிலிருக்கக் கூடிய எக்சிகியூடிவ் ஆபீசர்கள், இன்னும் மற்ற சிப்பந்திகள், இவர்களுக்கு போதிய சம்பளம் இல்லாமல் இருக்கிறது. அதைப்பற்றி அநேகமாக எல்லோருக்கும் தெரியும். அது மட்டுமல்ல, பொது விவாதம் நடந்தபோதுகூட பல அங்கத்தினர்கள் இந்த எக்சிகியூடிவ் ஆபீசர்களுக்கும் மற்றும் இதர சிப்பந்திகளுக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் சம்பளம் குறைவாக இருப்பதால் பலதவறுதல்கள் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள் என்றும், அதனால் அவர்கள் கெட்ட பழக்கங்களிலும் ஈடுபடுகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். இதை எல்லோரும் கவனித்திருக்கவேண்டும். இம்மாதிரியான காரியங்களில் அவர்கள் ஈடுபடக்கூடாது என்பதற்காக கோவில் சிப்பந்திகளுக்கும், தர்மஸ்தாபன அதிகாரிகளுக்கும் அதிகப்படியான சம்பளம் கண்டிப்பாக கொடுத்தாக வேண்டும். குறைந்தபட்சம் கோவில் பொது வருமானத்திலிருந்து பத்து சத விகிதம் இதற்கு என்று ஒதுக்கி அதிலிருந்து அவர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்க வேண்டும். இவ்விதம் பத்து சத விகிதம் ஒதுக்கினால்தான் அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவும் முடியும். இப்பொழுது அநேக தர்மஸ்தாபனங்களில் தேர், திருவிழா என்று அதிகப்படியான ஆடம்பரச் செலவுகள் நடந்து வருகிறது. அவைகளின் செலவைக் குறைத்துக்கொண்டு, சிப்பந்திகளுக்கும் நிர்வாக உத்யோகஸ்தர்களுக்கும் போதுமான சம்பளம் கொடுத்தால் அவர்களுக்கு மேலும் மேலும் ஊக்கம் ஏற்பட்டு அதன்மூலம் வருமானத்தை அதிகப்படுத்த அவர்களுக்கு உற்சாகம் ஏற்படும். நல்ல காரியங்களைச் செய்யவும் முற்படுவார்கள். ஆகையால் ஐந்து சத விகிதம் என்பதை பத்து சத விகிதம் என்று உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

7th August 1954]

* THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, the maximum contribution now proposed to be levied under Clause 15 (1) of the Bill is 5 per centum. The contribution now levied is three per centum. I do not think it is now necessary to increase it by $2\frac{1}{2}$ per centum as suggested in the amendment moved by hon. Member Sri M. Kalyanasundram. When we feel there is need to increase the contribution . . ."

SRI M. KALYANASUNDRAM :—" When the Government have no powers to increase the contribution, how can they do it? "

* THE HON. SRI B. PARAMESWARAN :—" When we bring in another Bill we will examine the suggestion whether the percentage of contribution should be increased to $7\frac{1}{2}$ per centum."

* SRI M. KALYANASUNDRAM :—" Sir, on a point of information, இப்பொழுது ஐந்து சதவிகிதம் என்ற அடிப்படையில் எவ்வளவு தொகை வசூலாகும் என்பதையும் இந்த வருஷத்தில் எவ்வளவு பணம் எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not have the exact figures."

* SRI M. KALYANASUNDRAM :—" நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தின்படி 7, சதவிகிதம் வரையில் போட்டாலும் சரி அல்லது கனம் ராமலிங்கத்தின் திருத்தத்தின்படி பத்து சதவிகிதம் வரை வசூல் செய்தாலும் சரி அதில் ஒரு ஆட்சேபணையுமில்லை. எங்களுடைய திருத்தங்களை ஒப்புக்கொண்டால் கமிஷனர் 3 சதவிகிதமோ, 4 சதவிகிதமோ அல்லது 7 சதவிகிதமோ எதை வேண்டுமானாலும் வசூலித்துக் கொள்ளலாம். எந்த விகிதத்திலாவது வசூலித்துக்கொள்ளலாம். அதற்கு ஒரு வரையறுப்பும் இல்லை. சட்டத்தில் அதிகாரம் கொடுக்கவேண்டும் என்பதுதான் எங்கள் கருத்து. நாங்கள் அதிகாரம் கொடுக்கிறோம் வசூல் செய்து கொள்வதற்கு. அதை கனம் மந்திரி அவர்கள் எற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறார். அதைக்கண்டு நாங்கள் பரிதாபப்படவேண்டியதாக இருக்கிறது. நாங்கள் கொடுக்கும் அதிகாரத்தை அவர் வாங்கிக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதாகத்தான் தோன்றுகிறது."

MR. SPEAKER :—" The question is—

'In the proposed new sub-section (1), *for* the words " five per centum ", *substitute* the words " seven and a half per centum ".' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

'In the proposed new sub-section (1), *for* the words " five per centum ", *substitute* the words " ten per centum ". ' "

The amendment was put and lost.

MR. SPEAKER :—" The question is—

'In sub-secion (1) of Section 76 amended by Clause 15, *after* the words " and their officers ", *insert* the words " and for defraying the expenses incurred on account of such services ".' "

The amendment was put and carried.

MR. SPEAKER :—" The question is—

'*Renumber* the existing Clause 15 as sub-clause (1) of that clause and *insert* the following as sub-clause (2) :—

" (2) At the end of the said Section 76, the following explanation shall be added :—

'*Explanation.*—Any religious institution, the annual income of which is less than two hundred rupees, shall not be liable to pay any contribution to the Commissioner as required by sub-section (1).' " ' "

The amendment was put and carried.

Clause 15 as amended was put and carried..

Clause 16.

MR. SPEAKER :—" The motion is—

' That Clause 16 do stand part of the Bill.' "

SRI M. KALYANASUNDRAM :—" Mr. Speaker, Sir, I move—

'*In the proposed Chapter IX,* add *at the end of sub-section* (2) *of Section* 82, *the following as sub-section* (3) :—

" (3) *If there is any surplus in the hands of the Commissioner after payment to the Government of any sum under this section. the Commissioner shall be entitled to spend such surplus for any educational or charitable purpose or in respect of poor and needy temples for the purpose of renovation, revival or for the maintenance of the services :*

Provided that the Commissioner causes to be placed on the table of the House annually, a report on the administration of this Fund." ' "

SRI S. RAMALINGAM :—" I second the amendment."

MR. SPEAKER :—" Motion moved—

' In the proposed Chapter IX, *add* at the end of the sub-section (2) of Section 82, the following as sub-section (3) :—

" (3) If there is any surplus in the hands of the Commissioner after payment to the Government of any sum under this Section, the Commissioner shall be entitled to spend such surplus for any educational or charitable purpose or in respect of poor and needy temples for the purposes of renovation, revival or for the maintenance of the services :

Provided that the Commissioner causes to be placed on the table of the House annually a report on the administration of this Fund." ' "

SRI M. KALYANASUNDRAM :—" Sir, it is now five minutes to 1-30 p.m. The House may now be adjourned for lunch."

7th August 1954]

MR. SPEAKER :—" We can now finish the second reading of the Bill and we can have the third reading in the afternoon."

SRI M. KALYANASUNDRAM :—" I may require ten to fifteen minutes to speak on this amendment."

MR. SPEAKER :—" The hon. Member should know that we may have to finish two more Bills in the evening. Besides some Members want the House to be adjourned early in the evening at 4-30 p.m. to attend the foot-ball match."

SRI M. KALYANASUNDRAM :—" I submit, Sir, that I require at least 15 minutes to speak on my amendment."

MR. SPEAKER :—" I have no objection. I adjourn the House to meet again at 2-30 p.m."

(After lunch—2-30 p.m.)

MR. SPEAKER :—" The hon. Member Sri M. Kalyanasundram who has moved an amendment is not in his place. Therefore his amendment is deemed to have been withdrawn."

SRI S. RAMALINGAM :—" Sir, hon. Member Sri M. Kalyanasundram has already moved his amendment. I also want to speak on the same."

MR. SPEAKER :—" Has the hon. Member moved his amendment? "

SRI S. RAMALINGAM :—" Yes, Sir."

MR. SPEAKER :—" The hon. Member can now speak."

SRI S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டப் பிரகாரம் ஏற்படுத்தப்படும் சர்க்கார் அறநிலையப் பாதுகாப்பு இலாகாசிப்பந்திகளுக்கும், இதரர்களுக்கும் செலவு செய்யப்படும் பணம் போக பாக்கியிருப்பனவற்றை பொது மக்களின் சுகாதாரம், கல்வி போன்றவைகளுக்குச் செலவிடுவதோடுகூட அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் மாஜி மந்திரி அவர்கள் குறிப்பிட்டது போல இடிந்துவிழும் தருவாயிலிருக்கும் மற்ற கோயில்களையும் புதுப்பிக்கும் பணியில் செலவிடவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். அதற்காகவே தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறோம். இதைச் சர்க்காரும் அநேகமாக ஒத்துக்கொள்வார்கள் என்றே நான் நம்புகிறேன்."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, கொஞ்சம் தாமதித்து வந்ததற்காக மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

" நான் கொடுத்திருக்கும் தீர்மானத்தின் நோக்கம் சமூகத்தின் நலனை உத்தேசித்து இன்னும் கொஞ்சம் அதிகப் பணம் செலவிடும் அதிகாரத்தைக் கமிஷனருக்குக் கொடுக்கவேண்டுமென்பது தான். செல்வ வசதி மிக அதிகம் உள்ள ஆலயத்தின் நிதியிலிருந்து செல்வ வசதி குறைவாக உள்ள ஆலயங்களுக்கும் கொஞ்சம் செலவு செய்து அங்குள்ள மக்களுக்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான் அடிப்படைக் கொள்கை. எங்களுடைய இந்த வாதத்தைக் கேட்கும்போது சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறிது ஆச்சர்யமடையலாம். கம்யூ

[Sri M. Kalyanasundram] [7th August 1954

னிஸ்டுகள் தெய்வபக்தி இல்லாதவர்கள் ; கடவுள் பக்தி இல்லாதவர்கள் ; அவர்களுக்கு மதமே கிடையாது என்றெல்லாம் பிரசாரம் செய்து வருகின்ற அவர்கள் இந்த வாதத்தைக்கேட்டு ஆச்சர்யப்படாமல் எப்படியிருக்க முடியும் ? தேர்தல் காலங்களில் கம்யூனிஸ்டுக் கட்சியைப்பற்றி இந்தமாதிரியாக காங்கிரஸ்காரர்கள் எப்படிப் பிரசாரம் செய்தபோதிலும்கூட, கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை எதுவாக இருந்தபோதிலும்கூட, மக்களின் தெய்வ நம்பிக்கைக்கு எதிராக அக்கட்சி எந்தத் தடையும் விதிக்கவில்லை. அதற்குமாறாக வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டுதான் வருகிறது, கம்யூனிஸ்டுகளின் ஆட்சி நடைபெறும் நாடுகளிலும்கூட, என்பதை விஷயம் நன்கு அறிந்தவர்கள் உணர்வார்கள். விஷயம் எதுவும் தெரியாமல் எதைப்பற்றி எப்படிவேண்டுமானாலும் பேசுவோரைப்பற்றி நான் எதுவுமே சொல்லத் தயாராக இல்லை. பொதுவாக எங்களுக்கு எங்கள் கட்சியே மதம். கம்யூனிஸத்தைக் காட்டிலும் சிறந்த மதம், சிறந்த தெய்வம் கிடையாது என்பது எங்கள் தத்துவம். ஆயினும் அவரவர்களுடைய தெய்வத்தைத் தொழுவதை நாங்கள் ஆட்சேபிப்பதும் கிடையாது. அதேசமயத்தில் தெய்வத்தைக் காட்டி மனிதனை மனிதன் ஏமாற்றுவதையோ, ஒரு சமூகத்தைச் சுரண்டுவதையோ பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அதை கம்யூனிஸ்டுகள் விரும்புவதும் இல்லை.

" அடையார் போன்ற இடங்களில் மாடமாளிகையில் வாழும் ஆடம்பரக் கும்பல் ஒருபுரமிருக்க, அனாதியாய் தெரு ஓரங்களில் தங்க இடமின்றி தத்தளிக்கும் மனித ஜாதியினரும் இருப்பதைப் போலவே இன்றைய தினம் சில கோயில்களிலுள்ள ஸ்வாமிகளுக்கு வைரப்பதக்கங்களும், ரத்தினச் சடாரிகளும் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் சில ஸ்வாமிகளோ தங்க இடமின்றி அரசமரத்தடியிலும், ஆலமரத்தடியிலும் இருப்பதையும் காண்கிறோம். சில கோயில்களின் நிதி லட்சக் கணக்கில் சேர்ந்துகொண்டே போகின்றது. சில கோயில்கள் இடிந்து விழுந்து கொண்டேவருகின்றன. அதனால்தான் இந்தச் சட்டத்திலேயே இன்னும் கொஞ்சம் அதிக அதிகாரத்தை கமிஷனருக்குக் கொடுத்தால் அவர் அழிந்து கொண்டேபோகும் கோயில்களை அதிக வருமானம் வரும் கோயில்களின் நிதியின் ஒரு பகுதியிலிருந்து எடுத்துக் கட்ட வசதி செய்யக் கூடும். அதற்காகத்தான் நான் கமிஷனர் 5 சத விகிதம் செலவு செய்யலாமென்று இருப்பதை 7½ சத விகிதம் என்று திருத்த முயற்சி செய்தல் நலமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதில் எந்த விதமான
2-40 p.m. தவறும் கிடையாது. சில கோயில்களின் வருமானம் குறைவாக இருப்பதால் அங்குள்ள நிர்வாகிகளுக்கு மிகக் குறைந்த சம்பளமே கொடுக்கப்படுகிறது. சில கோயில்களில் பக்தர்கள் தங்க வசதியில்லை. குடிக்க தண்ணீர் வசதியில்லை. இவையெல்லாம் கமிஷனர் இந்தப் பணத்தைக் கொண்டு செய்யலாம். இதில் தவறு எதுவும் கிடையாது. இந்த மாதிரியான நோக்கங்களைக் கொண்டுதான் இந்தத் தர்ம ஸ்தாபனங்களுக்கு நம் முன்னோர்கள் சொத்துக்களை எழுதி வைத்திருப்பார்கள். இன்றைக்கு அவர்களே உயிருடன் இருப்பின் அந்த தர்ம சொத்துக்கள் துர்வினியோகம் செய்யப்படுவதைக்கண்டு கண்ணீர் வடிக்காமலிருக்க மாட்டார்கள். ஆகவே நாம் இப்படிச் செய்வதால் அவர்களுடைய எண்ணம் உண்மையில் ஈடேற முடியும். கனம் நண்பர் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் நேற்று தெரிந்தோ தெரியாமலோ ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டு விட்டார். அதாவது அந்தந்த மத தர்ம ஸ்தாபனத் தலைவர்கள் சரியான முறையில் நடந்து கொள்ளவில்லையானால் அந்தந்த மத சமூகத்தினர் அதனைத் திருத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமென்று சொன்னார். குறிப்பாக திருவாடுதுறை ஆதினத்தார் தவறான காரியங்களைச் செய்தால் நாளைக்கே அங்கேயுள்ள மக்கள் அவர் நடத்தையைத் திருத்தும் வகையில் மடத்தின் முன் கிளர்ச்சி செய்யத் தயார். ஆனால் கனம் சுப்பிரமணியம் அவர்கள் போலீஸ் படையை ஏவி மக்கள் மண்டையை உடைக்காமல் இருப்பாரா என்று நான் கேட்கிறேன். இவர் போலீஸ் படையை அனுப்பவில்லையென்று மாத்திரம் சொல்லட்டும். அங்குள்ள மக்களே அங்கங்கே நடக்கும் ஊழல்களை அம்பலப்படுத்தி அவைகளைச் சீர்திருத்த நடவடிக்கை எடுக்கின்றார்களா இல்லையா என்று பார்ப்போம். மக்கள் கிளர்ச்சி செய்யப்

7th August 1954] [Sri M. Kalyanasundram]

யப்போகிருர்கள் என்றுல் நாளைக்கே நமது நிதி மந்திரி அங்கே போலீஸ் படையைக் கொண்டு போய் வைத்து விடுவார். உடனே கம்யூனிஸ்டுகளின் பேரில் குற்றம் சாட்டி அடக்குமுறைக்கு ஆயத்தம் செய்து விடுவார். இதில் துளிக்கூட எங்களுக்குச் சந்தேகமில்லை. ஆகவே இனியாவது கட்சி மனப்பான்மையையும், துவேஷக் கண்ணுேட்டத்தையும் விட்டுவிட்டு நாங்கள் சொல்லும் அடிப்படைக் கருத்தைப் புரிந்துகொண்டு இந்தப் பிரச்னையை நன்கு பரிசீலனை செய்ய வேண்டுமென்பதே எங்கள் வேண்டுகோள். அதன்பேரில் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தையும் சர்க்கார் ஒத்துக் கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்."

Sri M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை நான் ஆதரித்துப் பேசுகின்றேன். இந்த ஸ்தாபனங்களை சர்க்காரும் அவர்களுடைய அதிகாரி களும் மேல்பார்வை பார்ப்பதற்கும், அது சம்பந்தமாக சர்க்காருக்கு ஏற்படும் நிர்வாகச் செலவிற்கும் ஸ்தாபனங்களின் வருமானத்தில் 7½ சத விகிதம் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இந்தத் திருத்தத்தை அவர் கொடுத்திருக்கிருர். இப்பொழுது நிர்வாக அதிகாரிகளுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும் கொடுக்கப்படும் சம்பள விகிதம் மிக மோசமாக இருப்பதன் காரணமாக அவர்கள் அங்கிருக்கும் மடாதிபதி களினுடைய செய்கையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதேபோல பரம்பரை பரம்பரையாக டிரஸ்டிகளாக இருந்துவரக்கூடியவர்களுடைய செய்கையை எதிர்த்தும் இந்த அதிகாரிகள் நடந்துகொள்ள முடியாத வர்களாக இருக்கிருர்கள். ஏனென்றுல், அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள விகிதம் மிகவும் குறைவாக இருப்பதுதான் இதற்குக் காரணம்.

" உதாரணமாக, லட்சக்கணக்காக வரும்படி வரக்கூடிய கோவில் தென் ஆற்காடு ஜில்லாவில் கள்ளக்குறிச்சியில் ஒன்று இருக்கிறது. அந்தக் கோவிலில் திருவிழாக் காலத்தில் லட்சக் கணக்கான பணம் சேரும். சாதாரண காலங்களில் உண்டியலை உடைப்பதற்கு அதிகாரிகள் இருக்கும் போது திருவிழாக் காலங்களில் மட்டும் அதிகாரிகள் உண்டியலின் மேல் சீல் வைப்பது கிடையாது. லட்சக் கணக்காக பணம் சேரக்கூடிய உண்டியலை நிர்வாக அதிகாரி ஸீல் வைக்காமல், அங்கிருக்கும் டிரஸ்டி யானவர் தங்களுடைய ஸீலை வைத்து, இரண்டு பெரிய மனிதர்களை— தனக்கு வேண்டியவர்களாகப் போட்டுக்கொண்டு—இரவோடு இரவாக உடைத்துவிடுகிருர். இரவிலே வீட்டுக்குக் கொண்டு வந்து யாருக்கும் தெரியாமல் அந்த உண்டியலை உடைத்திருக்கிருர். இதுமாதிரி டிரஸ்டி கள் கோயில் பணத்தை கொள்ளையடித்திருக்கிருர்கள். பரம்பரை டிரஸ் டியாக இருந்துவரும் ஒருவருடைய சொத்தின் மதிப்பு பதினைந்து ஆண்டு களுக்கு முன் எவ்வளவு இருந்தது, இப்பொழுது எவ்வளவு சேர்ந்தி ருக்கிறது என்பதைக் கணக்கெடுத்துப் பார்த்தால், அவர் பல லட்சக் கணக்கான ரூபாய்க்கு அதிகமாக சொத்தைச் சேர்த்திருப்பது தெரியவரும். இந்தச் சொத்து அவர்களுக்கு எப்படி வந்தது என்பதைப் பார்க்கவேண் டும். ஏழைமக்கள் கோயிலுக்கு வந்து தங்களுடைய வறுமையும், பிணி யும், இன்னல்களும் போகவேண்டுமென்ற தெய்வ நம்பிக்கையின்பேரில் கொண்டு வந்து கொட்டுகின்றுர்கள். இதையெல்லாம் சேகரித்து கொள்ளை யடித்த பணம் அவை. ஆகையால் அதிலிருந்து கமிஷனரிடம் 7½ சத விகிதம் கொடுத்து அதிகாரிகளுக்கு சம்பளத்தைச் சேர்த்துக்கொடுப்பது போன்ற காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். சர்க்காருக்கு 7½ சதவிகிதம் இந்த ஸ்தாபனங்களிடமிருந்து கிடைத்தால், அதைக்கொண்டு கல்வி நிலையங்கள், தர்மங்கள் முதலிய நல்ல காரியங் களுக்கு பயன்படுத்த முடியும். கோயில் திருவிழாக் காலங்களில் லட்சக் கணக்கான யாத்ரீகர்கள் வந்து கூடும்போது அவர்களுக்கு வேண்டிய சுகாதார வசதிகள், மின்சார விளக்கு வசதிகள் போன்ற நல்ல காரியங் களுக்கும் இந்தப் பணத்தை சர்க்கார் செலவிடுவதற்கு சந்தர்ப்பம் இருக் கும். நிறைய பணம் வந்தால் நல்ல தர்ம காரியங்களுக்கு செலவழிக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, சர்க்கார் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

[7th August 1954

THE HON. SRI B. PARAMESWARAN :—" I would request you, Mr. Speaker, to kindly give me permission to re-open Clause 15."

MR. SPEAKER :—" I think it is the intention of Government to accept the amendment of hon. Member Sri Kalyanasundram in a modified form. But they want to add it to the previous Clause. Therefore if the hon. Member withdraws his amendment and if the House gives permission, we can re-open Clause 15."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டத்தையே மறு பரிசீலனை செய்து அடிப்படையிலேயே மாறுதல் கொண்டுவர சர்க்கார் உத்தரவாதம் அளித்திருப்பதாலும், சர்க்கார் தரப்பில் இப்பொழுது கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்தம் கிட்டத்தட்ட என்னுடைய யோசனையை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதாலும் என்னுடைய திருத்தத்தை நான் வாபஸ் பெறுகிறேன்."

The amendment of Sri Kalyanasundram was by leave of the House withdrawn.

MR. SPEAKER :—" I hope the House gives permission to re-open Clause 15."

Clause 15 was, by leave of the House, re-opened.

Clause 15.

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I move—

' (1) After *the words " principal Act ", insert the brackets and figure* (1).

(2) Insert *the following item before item* (2) *already added and renumber that item as item* (3) :—

" (2) *After sub-section* (4), *the following* sub-section *shall be inserted, namely* :—

' (5) *Whenever there is any surplus after meeting all the charges referred to in the foregoing sub-section it shall be lawful for the Commissioner, acting* suo motu *or on an application to make grants to poor and needy religious institutions for carrying out repairs and renovation subject to such rules as may be framed by Government 'in this regard.'* " ' "

MR. SPEAKER :—" Motion moved—

' (1) *After* the words " principal Act ", *insert* the brackets and figure (1).

(2) *Insert* the following item before item (2) already added and *renumber* that item as item (3) :—

" (2) after sub-section (4), the following sub-section shall be inserted, namely :—

' (5) Whenever there is any surplus after meeting all the charges referred to in the foregoing sub-section it shall be lawful for the Commissioner, acting *suo motu* or on an application

7th August 1954] [Mr. Speaker]

to make grants to poor and needy religious institutions for carying out repairs and renovation subject to such rules as may be framed by Government in this regard.' " ' "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I hope the hon. Member, Mr. Kalyanasundram is now convinced that Government have not rejected to Communists' proposals as such. This is proof of the fact that we take proposals which are *bona fide* irrespective of whatever quarter they may come from."

SRI M. KALYANASUNDRAM :—" That is not sufficient.

" I suggest that there should be a proviso that after meeting such expenditure, a sort of report would be placed on the table of the House."

MR. SPEAKER :—" Whenever rules are framed under an Act the Committee on delegated legislation would go into the question. Hon. Member may perhaps be aware that we have now proposed to make provision in our Assembly Rules for the constitution of a Committee on delegated legislation. The rules framed under an Act of the Legislature will come up before the Committee and then before the House for ratification.

" I shall now put the amendment to the vote of the House. The question is—

' (1) *After* the words " principal Act ", *insert* the brackets and figure (1).

(2) *Insert* the following item before item (2) already added and *renumber* that item as item (3) :—

" (2) after sub-section (4), the following sub-section shall be inserted, namely :—

' (5) Whenever there is any surplus after meeting all the charges referred to in the foregoing sub-section it shall be lawful for the Commissioner, acting *suo motu* or on an application to make grants to poor and needy religious institutions for carrying out repairs and renovation subject to such rules as may be framed by Government in this regard.' " ' "

The motion was put and carried.

Clause 15 as further amended was put and carried.

Clause 16.

Clause 16 was put and carried.

Clauses 17, 18 and 19 were put and carried.

Clause 20.

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, I move—

' *In item* (3) after *the figure and words* " (3). *Appeals to Court* , insert *the words* " *or the High Court* ".' "

MR. SPEAKER :—" If I remember aright I think the hon. Member moved a similar amendment to Clause 6 and that was negatived. This amendment is consequential on that. Therefore, the hon. Member cannot move it."

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" No, Sir. The previous amendment related to another subject."

MR. SPEAKER :—" Then let him move."

The motion was duly seconded.

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" The heading should reflect truly the contents coming under that heading. It should properly describe the subject-matter, coming under that heading. Here this heading deals with matters connected with courts. The expressions ' court ' . . ."

MR. SPEAKER :—" The hon. Member has not understood the point."

* SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—' It is simply said here ' appeals to court.' Under this heading appeals to the High Court also are referred to and therefore the heading will not truly describe the contents coming under that heading unless under item (3) after the figure and words ' III. Appeals to court ', the words ' or the High Court ' are also added. Therefor I say that the words ' or the High Court ' should also be inserted in the heading. The subject-matter under the heading deals with matters connected with subordinate courts and district courts as well as the High Court. The expression ' court ' will include only the subordinate courts or district courts. But appeals to the High Court also come under this heading. The heading should indicate that the subject-matter under it is connected with appeals to the Courts or the High Court. Therefore, I move my amendment."

2-50 p.m. THE HON. SRI B. PARAMESWARAN :—" The suggestion of the hon. Member will be borne in mind when the other matters are taken up. I, however, oppose the amendment."

SRI P. S. KRISHNASWAMY AYYANGAR :—" Sir, I beg leave to withdraw my amendment."

The amendment was by leave of the House withdrawn.

Clause 20 was put and carried.

New Clause 1-A.

MR. SPEAKER :—" The hon. Member Sri B. Vaikunta Baliga is not in his place. The amendment is deemed to have been withdrawn."

7th August 1954]

Clause 1 and the Preamble.

Clause 1 and the Preamble were put and carried.

* THE HON. SRI B. PARAMESWARAN :—" Mr. Speaker, Sir, I am really thankful to the hon. Members of this House for the great enthusiasm they have exhibited while discussing this Bill. I have no doubt that the constructive criticisms offered by the hon. Members will be borne in mind when the Government bring in the comprehensive Bill. It is the intention of the Government to see that the temples, which are in a state of disrepair, are repaired and renovated and that those who are associated with the administration of the temples conduct themselves properly and set an example to others. I am sure that with the co-operation and goodwill of the hon. Members of this House, within a measureable period of time, we will be able to achieve our object, namely, that our temples will be inspiring and striking examples to others and will service the public in the manner in which they are expected to serve, spreading culture and knowledge to the millions of people in this country and elsewhere. I thank the hon. Members of this House for having helped me to get through this Bill. I beg to move—

> '*That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1954 (L.A. Bill. No. 27 of 1954), as amended, be passed into law.*' "

MR. SPEAKER :—" Motion moved—

> 'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1954 (L.A. Bill. No. 27 of 1954), as amended, be passed into law.' "

SRI S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, சபை முன்புள்ள இந்த மசோதாவானது இப்பொழுது சட்டமாக நிறைவேற இருக்கிறது. அதற்கு முன்பு ஒரு சில முக்கியமான விஷயங்களை சபையின் கவனத்திற்கும், குறிப்பாக சர்க்காரின் கவனத்திற்கும் கொண்டுவர ஆசைப்படுகிறேன். 2–54 p.m.

" தஞ்சை ஜில்லாவிலே பெரிய பெரிய மடங்களும், பெரிய கோயில்களும் இருப்பது அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும். தஞ்சை ஜில்லாவிலுள்ள திருப்பனந்தாள் மடத்திற்கும், திருவாடுதுரை மடத்திற்கும் சொந்தமாக ஆயிரக்கணக்கான ஏகர் நிலங்கள் இருக்கின்றன. இதர ஜில்லாக்களிலும் இந்த மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. ஆனால், தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் நாம் இந்தச் சபையிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச்சட்டத்தை இயற்றியிருக்கிறோம். இந்தச் சட்டம் இரண்டு ஆண்டுகளாக தஞ்சை ஜில்லாவில் அமுலிலிருந்து வருகிறது. சட்டத்திலுள்ள சில முக்கியமான அம்சங்களிலே சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு ஐந்து வருஷ சாகுபடி உரிமை உண்டு என்பதும் காணப்படுகிறது. ஆனால், இந்த மடங்களுக்கு இருக்கக்கூடிய நிலங்களைப் பராமரிப்பதில் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. கோயில்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமான ஆயிரக் கணக்கான நிலங்களை மொத்த குத்தகைக்கு இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு ஒரு தடவை விட்டு விடுகிறார்கள். அதன் காரணமாக நேரடியாக சாகுபடி செய்யக்கூடிய பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் நிலத்தை இழந்துவிட்டுப் போகக்

கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பலவிதமான சச்சரவு ஏற்பட்டிருக்கிறது. இதை நாம் சர்க்கார் அதிகாரிகளுடைய கவனத்திற்கும் கொண்டுவருகிறோம்.''

MR. SPEAKER :—'' ஷரத்துவாரி பரிசீலனைக்குப் பின் மூன்றாவது வாசிப்பின்போது அங்கத்தினர் இவைகளையெல்லாம் பேசிக்கொண்டிருக்கக் கூடாது. மசோதாவில் உள்ளதைப்பற்றி மட்டுந்தான் பேசவேண்டும்.''

SRI S. RAMALINGAM :—'' இந்த மசோதாவில் இருக்கிற விஷயத்தைப்பற்றிதான் நான் பேசுகிறேன். ஏற்கெனவே இயற்றியிருக்கிற அந்தச் சட்டத்தைச் சரியானபடி மதிக்கவேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே நேரடியாக சாகுபடி செய்துகொண்டு இருப்பவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து மொத்த குத்தகைதார்களுக்குக் கொடுத்துவிடுவது சரியல்ல. சிறு சிறு குத்தகைதார்களுக்கு நிலத்தை நேரடியாக கொடுத்து குத்தகையை வசூல் செய்வதில் தங்களுக்குக் கஷ்டங்களும் சிரமங்களும் இருக்கிறதென்று சொன்னால், அதற்கு சர்க்கார் ஒரு நிபந்தனையை விதிக்க வேண்டும். அதாவது மொத்தக் குத்தகைக்கு மடங்களிலிருந்து நிலங்களை எடுத்துக்கொள்பவர்கள் மடத்து நிலங்களில் ஏற்கெனவே நேரடியாக சாகுபடி செய்துகொண்டிருக்கும் விவசாயிகளை அந்தந்த நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தாமல் அவர்கள் மூலமாகவே சாகுபடி செய்யவேணடுமென்ற நிபந்தனையை சர்க்கார் விதிக்கலாம். ஆனால், மொத்த குத்தகைதாருக்கு ஒரு குறிப்பிட்ட குத்தகையைக் கொடுக்கவேண்டும், என்று ஒரு நிபந்தனை விதிக்கலாம், அல்லது ஏலத்திற்கு விடலாம். அப்படிச் செய்தால் அந்தச் சட்டத்தினால் ஏற்பட்ட இடைஞ்சல்கள் இல்லாமல் இருக்கும்.

'' இன்னும் இந்தச் சட்டத்தை மேலும் ஒழுங்கானபடி நிர்வகிக்க வேண்டுமானால் அங்கு இருக்கக்கூடிய பொதுஜனங்களுடைய அபிப்பிராயத்தைக் கலந்துகொண்டு அவர்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்தால் கோவில் சொத்துக்களை சரியானபடி பராமரிக்க முடியும், அப்பொழுதுதான் தர்ம சொத்துக்களை சரிவர நிர்வகித்து மக்களுக்குச் செய்யவேண்டிய சேவைகளை நாம் சரியாகச் செய்யமுடியும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.''

2-57 p.m. * **SRI A. S. SAHAJANANDA** :—'' கனம் தலைவர் அவர்களே மடாதிபதிகளில் மிக ஒழுக்கமாக உள்ளவர்களும் இருக்கிறார்கள் ; சாதாரணமாக இப்பொழுது சிலர் வேஷம் போட்டுக்கொண்டு மடாதிபதிகளென்று சொல்லிக்கொண்டு ஒழுக்கம் இல்லாமலும் இருக்கிறார்கள். முன் காலத்தில் பிரம்ம நிஷ்டர்களாகவும் சகல சாஸ்திரங்களையும் படித்தவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் விளங்கி வந்திருக்கிறார்கள். இவர்கள்தான் சுரோத்திரிய பிரஹ்மநிஷ்டர்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் ஜனங்கள் உபசரித்து வணங்கி வந்தார்கள். கற்றறிந்த அப்படிப்பட்ட ஞானிகள் நிராசையுடன் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். எந்த நிமிஷத்தில் வேணடுமானாலும் மடத்தை விட்டுப் போவதற்குத் தயாராக இருப்பார்கள். அவர்கள்தான் மடத்தை நிர்வகிக்க உண்மையான யோக்கியதையுடையவர்கள். அவர்கள் ஆடம்பரத்தையோ வெளிவேஷத்தையோ விரும்பமாட்டார்கள். ஆகம சாஸ்திரங்களையும், தத்துவங்களையும் படித்து, ஒழுக்க சீலர்களாக அவர்கள் விளங்கி வந்த காரணத்தினால், அந்தக் காலத்தில் அவர்களை ராஜாக்களைப்போல் கொண்டாடவேண்டுமென்ற நோக்கத்தினால், அவர்களுக்கு பட்டு பீதாம்பரங்களும், நகை நட்டுகளும் வழங்கி வந்தார்கள். அவைகளை அணிந்தும் வந்தார்கள். அப்படிப்பட்ட ஒழுக்கமுள்ள ஞானிகளைப்பார்த்து ஏழைகள் தங்களுக்கு வேண்டுமென்று கேட்ட மாத்திரத்தில் அவர்கள் கொடுக்கக்கூடிய மனம் உடையவர்களாக இருப்பார்கள். பொன்னைப் பாம்பாக மதிக்கக்கூடிய தன்மையில் அவர்கள் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் பிட்சை எடுத்துத்தான் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைப் புசித்துவந்தார்கள். எளிய வாழ்க்கையும், தூய்மையான மனமும் உடைய அப்படிப்பட்ட மகான்களுக்காக பல இடங்களில் மடங்களைக் கட்டிக்கொடுத்து சொத்துக்களையும் ஏற்படுத்தினார்கள்.

7th August 1954] [Sri A. S. Sahajananda]

" அதில் இருந்துகொண்டு அவர்கள் பல பரோபகரமான காரியங்களைச் செய்துகொண்டுவந்தார்கள். இந்த மாதிரி கோவிலூரில் ஒரு மடமும், திருவண்ணுமலையில் ஈசான்ய மடமும், சிக்கலில் ஒரு மடமும், சிதம்பரத்தில் பொன்னம்பல சுவாமி மடமும், திருக்களரில் ஒரு மடமும், இன்னும் பல இடங்களில் பல மடங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனுல், அந்த மடங்களெல்லாம் நல்ல மடாதிபதிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இப்பொழுது கடந்த பத்து ஆண்டுகளாக செட்டியார் ஜாதியைச் சேர்ந்தவர்கள் மடாதிபதியாக இருக்கவேண்டுமென்று நினைத்து வருகிருர்கள். சுருட்டுப் பிடித்துக்கொண்டு நேற்றுவரை பெட்டியருகில் இருந்தவர்கள் சிலர் காவி வேஷம் போட்டுக்கொண்டு இருக்கிருர்கள். அப்படி அவர்கள் மடாதிபதிகளாக ஆனதிஞல் அவர்கள் என்ன செய்வார்கள் ? வரவு செலவு களைப் பார்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். சாதுக்களுக்கு சாப்பாடு போடுவது, வித்தியாதானம் அளிப்பது போன்ற நோக்கம் இல்லாத காரணத்திஞல் ஈசான்ய மடம் முதலிய மடங்கள் பாழடைந்திருக்கின்றன. சிக்கலில் உள்ள மடம் பாழடைந்திருக்கிறது. இதுபோன்றுது பல மடங்கள் பாழடைந்திருக்கின்றன. கோவிலூர் மடத்தைச் சேர்ந்த சோமசுந்தர சுவாமிகள் இந்த மாதிரி செய்துகொண்டிருக்கிருர். அந்த ஏராளமான பணத்தை வைத்துக்கொண்டு வைதீக சாஸ்திர ஞானத்தைப் பரப்பலாம். அப்படிச் செய்வதில்லை. ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கலாம். மேலும் இப்பொழுது கமிஷனராக இருப்பவர்கள் இந்த மடங்களின் மீது மிகத் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒருவருக்கும்கூட இந்தப் பெரிய மடங்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியான எண்ணம் வரவில்லை. ஆனுல் சிறிய சிறிய மடங்களின் நிர்வாகத்தில் தலையிட்டு, கஞ்சி ஊற்றியதற்கு கணக்கு கேட்கிருர்கள். பெரிய மடங்களின் அருகில்கூட அதிகாரிகள் போகமாட்டார்கள். பெரிய மடங்கள் பணத்தைக்கொண்டு மதப் பிரசாரத்திற்கும், கல்வி தானத்திற்கும் செலவழிக்கலாம். 3–30 p.m.

" கோவில்களிலும் மடங்களிலும் ஏழைகளை சரியாக கவனிப்பதில்லை. நிர்வாகத்தில் ஊழல் மலிந்து இருக்கின்றன. ஆதலால் கமிஷனருக்கு தீவிரமாக நடவடிக்கை எடுப்பதற்கு போதிய அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். அப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்கும்போது பெரிய சிபார்சுகளை பெற்றுக்கொண்டுவந்து சரிப்படுத்திவிடுகிருர்கள். இந்த டிரஸ்டிகள் பொதுப்பணத்தை தங்கள் சொத்து மாதிரி நினைத்துக்கொண்டு தங்கள் இஷ்டப்படி ஆடுகிருர்கள். பழய மந்திரி வெங்கடசாமி நாயுடு அவர்கள் கூட 'யாத்ரீகர்களுக்கு வேண்டிய சௌகர்யங்கள் செய்து கொடுக்கவேண்டும். அவர்கள் தங்குவதற்கு இட வசதி செய்து கொடுக்க வேண்டும்' என்று சொன்ஞர்கள். திருப்பதி தேவஸ்தானத்தில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. டிரஸ்டிகளாக இருப்பவர்கள் இவைகளையெல்லாம் சரியாக கவனிப்பதில்லை. ஏரியா கமிட்டியில் மெம்பராக இருப்பவர்கள் இதை கவனிக்கவேண்டும். ஒரு டிரஸ்டி கூட சரியாக நடப்பதில்லை என்பதை அனுபவத்தில் காணலாம். கோவில் சொத்துக்களை கண்டபடி செலவு செய்கிருர்கள். இவைகளையெல்லாம் நேரடியாக கவனிப்பதற்கு கமிஷனருக்கு ஒரு அதிகாரமும் அளிக்கப்படவில்லை. ஆதலால் சட்டத்தை பலமாக திருத்தி கமிஷனருக்கு சகல விதமான அதிகாரத்தையும் அளிக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் இந்த கோவில்களிலும் மடங்களிலும் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(At this stage, the Deputy Leader of the Opposition rose in his seat.)

Mr. SPEAKER :—" Already we are behind schedule of time fixed. If the hon. the Deputy Leader of the Opposition wants to speak a few words, I have no objection."

Sri M. KALYANASUNDRAM :—" Sir, I do not wish to speak."

MR. SPEAKER :—" I now call upon the Hon. Minister to reply to the debate."

THE HON. SRI B. PARAMESWARAN :—" I have nothing to say in reply to the debate."

MR. SPEAKER :—" The question is—

' That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1954 (L.A. Bill No. 27 of 1954), as amended, be passed into law.' "

The motion was carried and the Bill was passed into law.

(2) THE BHAVANISAGAR TOWNSHIP BILL, 1954.

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Mr. Speaker, Sir, I beg to introduce the Bhavanisagar Township Bill [a], 1954, for constituting a Township for the Bhavanisagar Colony and move :—

' *That the Bill be taken into consideration at once.*'

" The House is probably aware that the Lower Bhavani Project in the Coimbatore district is nearing completion. The project estimates are expected to be closed by February 1955. For the execution of this project, a large number of staff had to be employed and they had to be stationed at Bhavanisagar, and many buildings were constructed for the purpose. A colony thus sprang up at Bhavanisagar Headworks in course of time. The colony consists almost entirely of departmental staff, job workers and labourers employed in the execution of the Lower Bhavani Project. The sanitation, health, water-supply, housing, lighting and roads in the colony have been provided by the Public Works Department and the administration of the colony is now in the hands of the Executive Engineer, Lower Bhavani Project Headworks.

" The question of utilizing the buildings and quarters that would become surplus to the requirements of the Public Works Department, when the project is completed, is separately engaging the attention of the Government. Whatever use the vacant buildings may be put to, there will still be a large number of people residing in the colony for whose benifit some sort of local administrative body would be necessary. The area is at present under the jurisdiction two panchayat boards and it will not be desirable to have the administration of the colony under such dual control. Moreover, many of the buildings are likely to be in the occupation of the Government Departments and Government staff and it is rather unnecessary and inappropriate that a Goverment colony consisting almost entirely of Government land and property should

[a] Published in the *Fort St. George Gazette*, dated 21st July 1954.

7th August 1954] [Raja Sri Shanmuga Rajeswara Sethupathi]

be under the administration of a panchayat or panchayats especially in the early stages, before permanent non-official settlers come to the place and establish themselves. Administration by trained officials is, therefore, desirable under the circumstances.

"Section 3 (2) of the Madras Village Panchayats Act, 1950, empowers the Inspector of Municipal Councils and Local Boards by notification, to exclude from a village panchayat, any revenue village comprised therein. But in regard to any village so excluded, it is obligatory on the Inspector to take action to constitute a panchayat in accordance with Section 3 (1) of that Act. There is no provision in the Village Panchayats Act, 1950, which enables him or the Government to exclude any local area from the jurisdiction of a panchayat unless such excluded area is itself to be constituted into a panchayat.

"The question of amending the Village Panchayat Act, 1950, to provide for the exclusion of such areas from the jurisdiction of an existing panchayat without another panchayat being constituted for them is under consideration separately. But this proposed general legislation may take time to be passed, and it is considered that it would be preferable to have a separate Act for Bhavanisagar to establish a Township Committee there under Government aegis for administration by nominees of Government, most of whom would be officials, on the model of the Mettur Township Committee. After the township has dealt with all the early problems and if a number of non-officials settle in the area, the question of entrusting the administration to a non-official body may be considered.

"Accordingly, it is proposed to undertake legislation to exclude the Bhavanisagar area from the jurisdiction of the two Panchayat Boards of Kuduvay and Thoppampalayam, form the area so excluded into a township and vest the administration of the Township in a Committee."

MR. SPEAKER :—" Motion moved—

'That the Bhavanisagar Township Bill, 1954, be taken into consideration at once.' "

*SRI P. G. KARUTHIRUMAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பவானிசாகர் அணைக்கட்டு முடியும் தருவாயில் இருப்பதினால் பஞ்சாயத்துகளின் கீழ் இங்கு இருக்கும்படியான கிராமங்களை டவுன் ஷிப்பாக மாற்றவேண்டுமென்று கனம் மந்திரி அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் அவைகள் டவுன்ஷிப்பாக மாறுவதற்கு முன்னாலே பவானிசாகர் கட்டும்போது என்ன நிலையிலே சர்க்கார் பூமிகளை ஆர்ஜிதம் செய்தார்கள் என்றும், எந்த முறையிலே இங்கு இருக்கும்படியான மக்களுக்கு வேறு பூமிகள் வினியோகிக்கப்பட்டது என்றும், இங்கு வாழும்படியான மக்களின் நிலை என்ன என்றும் யாதொரு முடிவுக்கும் சர்க்கார் வரவில்லை. அந்தத் தொகுதியிலிருந்து வரும் நான் பல தடவைகளில் இது விஷயமாக சர்க்காருக்கு அந்த மக்களிடையே இருக்கும்படியான கஷ்டங்களை எடுத்து சொல்லியும்கூட இன்னும் ஒரு விதமான முடிவுக்கும் வரவில்லை. 3-05 p.m.

"அணை கட்டுவதற்கு முன்னால் சுமார் ஐந்து கிராமங்களை சர்க்கார் ஆர்ஜிதம் செய்தார்கள். **Submerged area,** தண்ணீரால் மூழ்கப்படும்

[Sri P. G. Karuthiruman] [7th August 1954

இடத்திற்கு வேண்டிய ஐந்து கிராமங்கள் போக, **Colonization,** சர்க்கார் சிப்பந்திகள் அணை வேலைக்கு ஈடுபட்ட மக்கள் இருப்பதற்காக, செய்வதற்காக ஐந்து கிராமங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டன. அப்போது மராமத்து இலாக்கா என்ன சொன்னார்கள் என்றால் தங்கள் தேவைக்குப்போக மீதி இருப்பதை மக்களுக்கு திருப்பிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த முறையிலே வேண்டிய அளவுக்குமேல் இரண்டு மூன்று பங்கு பூமிகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டன. இப்பொழுது அந்த மக்களுக்கு கொடுக்கும்படியான பூமியிலே ஐந்து ஏக்கர் நிலம் இனாமாகவும் அதற்கு மேல் 30 ஏக்கர் வரையிலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுப்பதாக சொல்லப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பூரணமாக இன்னும் அவைகள் வினியோகிக்கப்படவில்லை. ஆனால் ஒரு குறித்த காலத்திலே வினியோகிக்கப்படும் என்று ரெவினியூ டிபார்ட்மெண்டு சொல்லிவிட்டது. மராமத்து இலாக்கா அதிகாரிகள் 'எல்லாம் முடிந்துவிட்டன' என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், இங்கு இருக்கும்படியான மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

"ரெவின்யூ போர்டிலே இதற்கு இரண்டு விதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அணைக்காக ஒதுக்கப்பட்ட நிலத்திலிருந்த மக்களுக்குத் தான் 30 ஏக்கர் கொடுப்பதென்றும், **Colonization**-காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட பூமியிலே இருந்தவர்களுக்கு ஐந்து ஏக்கர் என்றும் இரண்டு பாகுபாடுகள் இருக்கின்றன. பூமியை இழந்தவர்கள் எல்லாம் ஒரே நிலையிலே இருக்கின்றனரே ஒழிய மூழ்கப்பட்ட கிராமங்களில் வாழ்ந்தவர்கள் என்றும் **Colony** கிராமத்தில் இருந்தவர்கள் என்றும் வித்தியாசம் இருக்கக் கூடாது. அவர்களுக்கு பக்கத்திலே சிற்சில இடங்களில் உள்ள விவசாய பூமிகள் எல்லாவற்றையும் ஆர்ஜிதம் செய்துவிட்டார்கள். ஆனால் அங்கு இருக்கும் வீடுகளுக்கு இன்னும் நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை. பொங்கார் கிராமம் அணைக்குப் பக்கத்திலே இருக்கிறது. இருநூறு வீடுகள்தான் இங்கு இருக்கின்றன. அதைச்சுற்றிலும் உள்ள விவசாயிகளின் நிலங்களை ஆர்ஜிதம் செய்தார்கள். அவர்களுக்கு ஐந்து ஏக்கர் நிலம்தான் கொடுக்கப்படுகின்றன. அங்கு இருக்கும்படியான குடிமக்களுடைய வீடுகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேணடுமென்றால் மேலே பணம் கொடுப்பது கஷ்டம் என்று சொல்லுவார்கள். எப்போது பூமிகளை ஆர்ஜிதம் செய்தார்களோ, அப்போதே அங்கு இருக்கும்படியான மக்களுடைய வீடுகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏதாவது ஒரு திட்டத்தை நாம் கொண்டுவருவதற்கு முன்னால் அதனால் ஏற்படும்படியான பிரச்னைகளை முதலில் தீர்த்துவிட்டு பின்னாலே ஒரு திட்டமான முடிவுக்கு வருவதுதான் நல்ல முறை என்று நினைக்கிறேன். விவசாயத்திற்கு அருகதையாக இருக்கும் நிலத்தையும்கூட, ஒரு காலத்தில் மண் அணைக்கு மண் தேவையாக இருக்கும்பொழுது இந்த நிலங்கள் வேண்டியிருக்கும் என்ற காரணத்தைச் சொல்லி ஆர்ஜிதம் செய்த பூமி சர்க்காரிடமே இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். விவசாயம் செய்யப்பட்டிருந்த சுமார் 200 ஏக்கர் பூமி சர்க்கார் கைவசம் இருக்கிறது. மராமத்து இலாக்கா என்ன சொன்னதென்றால் 'மீதி இருக்கும்படியான பூமியை வேலை முடிந்த பிறகு விவசாயிகளிடம் திருப்பி கொடுத்துவிடுகிறோம்.' ஆனால் இப்பொழுது அதே மராமத்து இலாக்காவினர் விவசாயத்திற்கு அருகதையுள்ள 200, 300 ஏக்கர் நிலத்தை மண் எடுப்பதற்கு தேவையாயிருக்கிறதென்று சொல்லிவிட்டார்கள். அப்படி இருக்கும்போது அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய பூமியை வேரிடத்திலே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிடில் விவசாயத்தை மீண்டும் தொடர்ந்து நடத்துவதற்கு யார் நஷ்ட
3-10 p.m. ஈடு திருப்பி கொடுக்கிறார்களோ அவர்களுக்கு பூமியை திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பூமி சொந்தக்காரர்களுக்கே குறைவான குத்தகையில் விவசாயம் செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுதல் மிகவும் அவசியம். இந்தப் பிரச்னை யெல்லாம் தீராமல் இருக்கின்றன. கஷ்டங்களும் சங்கடங்களும் ஏற்பட்டு நெருக்கடியான நிலையில் இருக்கின்றன. ஒரு முடிவையும் இதுவரையிலும் காணப்படவில்லை. டவுன்ஷிப் ஏற்படுத்தி இந்த இரண்டு பஞ்சாயத்துகளையும் அந்தக் காலனியோடு சேர்த்தால் மேட்டூரில் ஏற்பட்ட நெருக்கடியைப்போல் இங்கும் ஏற்படும். மேட்டூரில் நெருக்கடி எவ்வளவு தூரம் ஏற்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த

7th August 1954] [Sri P. G. Karuthiruman]

விஷயம். அங்கு பூமிகளை திருப்பிக் கொடுத்தும் வாங்கிக் கொள்ளும் நிலைமையில் இல்லை. அதனுல் இங்கு பூமிகளை திருப்பிக் கொடுப்பதாக இருந்தால் அதற்கு திட்டவட்டமான ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே அந்த கிராமங்களுக்கு இரண்டு விதமான கஷ்டங்கள் இருக்கின்றன. பூமிகளை ஒப்படைப்பதற்கு முன்னுல் அங்குள்ள வீடுகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்பொழுது நஷ்ட ஈடு கொடுக்கப்படாமல் இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நஷ்ட ஈடு கொடுத்தாக வேண்டும். 30 ஏக்கர் வரை பூமி உள்ளவர்களுக்கு பூமி கொடுக்கலாம் என்று இருக்கிறது. அவ்விதம் 30 ஏக்கருக்கு மேல் இருக்கும் காலனி கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு 30 ஏக்கர் வரை பூமி கொடுக்க ஏற்பாடு செய்தாக வேண்டும். இந்த இரண்டு மூன்று வருஷங்களாக பூமிகளை சரியானபடி விநியோகம் செய்யாத நிலைமையில் இருப்பதால் அங்குள்ள மக்கள் அதிருப்தியுடன் இருக்கிருர்கள். அதனுல் சங்கடப்பட்டுக்கொண்டும் இருக்கிருர்கள். இப்பொழுது அந்த பூமிகளை கொடுத்துவிட்டால் அதற்கு உரிமை கொண்டாடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அங்குள்ள குடியானவர்களுக்கு பூமியை பிறகு கொடுக்கிறேம் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது அங்கு வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. அதனுல் அதை டவுன்ஷிப்பாக மாற்றவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதற்குள் அவர்களுக்குள்ள பூமியைக் கொடுக்கவேண்டும். இனிமேல் அங்கு புதுப் புது வரிகளைப் போடும்படியான நிலைமை ஏற்படலாம். இப்பொழுது அங்குள்ள இஞ்சினீர், எஸ். டி. ஓ. முதலிய அதிகாரிகள் இருப்பதற்கு வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் அங்கு சௌகர்யமாக இருக்கிருர்கள். ஆனல் சாதாரணமாக கிராம மக்கள் அங்கு இருக்க விரும்ப மாட்டார்கள். அங்கு காலனியை டவுன்ஷிப்பாக மாற்றுவதற்கு எல்லோரும் சந்தோஷப்படுகிருர்கள். டவுன்ஷிப் ஏற்பட்டால் அவர்களுக்கு சௌகர்யமாகத்தான் இருக்கும். அங்கு காலனியில் 500 நடுத்தர வகுப்பினர் குடும்பங்கள் இருக்கின்றுர்கள். அங்கு 4,000 தொழிலாளர்கள் வசிப்பதற்கு இடம் இருக்கிறது. அங்கு 200, 300 ஏக்கர் நிலம் இருக்கிறது என்பது வாஸ்தவம்தான். டவுன்ஷிப்பாக மாற்றுவதற்கு முன் சர்க்கார் அந்த மக்களின் சௌகர்யங்களை கவனிக்க வேண்டும். உடனடியாக அங்குள்ள பொது மக்களைக் கலந்து அவர்களுடைய பிரச்னை என்ன, அவைகளை நிரந்தரமாக தீர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதையும், விவசாயிகளுக்கு வேண்டிய பூமிகளை அவர்களுக்குக் கொடுப்பதற்கும் முன் கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும். எந்த குடியானவர்கள் அங்கு நிலங்களை வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதை தெரிந்து அவர்களுக்கு முதலில் வேறு நிலம் கொடுக்க வேண்டும். அதற்கு திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரவேண்டும். இப்பொழுது மேட்டூரில் நில ஆர்ஜிதம் செய்து அங்குள்ளவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டது போல் இங்கும் ஏற்படக்கூடாது. உடனடியாக இப்பொழுது செய்ய வேண்டியது என்னவென்றுல் இப்பொழுது சில கிராமங்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்துவிட்டு டவுன்ஷிப் ஏற்படும்போது அங்குள்ள ஏரியாவை விஸ்தரித்து விவசாயிகளுக்கு அருகதையான பூமிகளை இப்பொழுதே திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதைப் பற்றி மராமத்து இலாகாவை ஆலோசனை கேட்டால் பின்னுல் மண் அணை போடுவதற்கு வேண்டும், அதற்கு எவ்வளவு நாள் ஆகும் என்று சொல்லமுடியாது என்று சொல்லுவார்கள். அது ஒரு டெக்னிகல் அப்ஜெக்ஷன். (technical objection). அந்த மாதிரியான நிலைமை ஏற்படாமல் விவசாயிகளுக்கு அந்த பூமிகளில் முன் உரிமை வேண்டும். இப்பொழுது பூமி தங்களது என்று சொல்வதற்கு உரிமை இல்லை. ஆகவே டவுன்ஷிப் வருவதற்குமுன் அங்கு பொதுக்கூட்டங்கள் போட்டு அவர்களுடைய கோரிக்கைகளை கேட்டு அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் அந்த இரண்டு கிராமங்களையும் இதில் சேர்க்காமல் இருந்தால் நல்லதாக இருக்கும். பிறகு அங்குள்ள எல்லா பிரச்னைகளையும் டவுன்ஷிப் ஏற்படுவதற்கு முன் தீர்த்து வைக்க வேண்டும். அத்துடன் காலனி கிராமங்களில் உள்ள விவசாய மக்களுக்கு 30 ஏக்கர் வரை அவர்களுக்கு பூமி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவைகளுக்கு எல்லாம் முதலில் ஒரு தீர்மானம் செய்து கொண்டு பின்னுல் டவுன்ஷிப்அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

3 15 p.m. SRI M. KALYANASUNDRAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவில் கண்டிருக்கிறபடி பவானிசாகர் பிரதேசத்தை டவுன் ஷிப்பாக அமைக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இந்த டவுன்ஷிப் கமிட்டியை அமைக்கும் முறையை எங்களால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ஜனநாயகத்திற்கு முரணான முறையில் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் இவ்வளவு பெரிய காலனியை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பை ஒப்படைப்பது சரியல்ல என்பது என்னுடைய அபிப் பிராயம். இந்த கமிட்டியை தேர்தல் மூலமாக தேர்ந் தெடுக்கப்பட்ட மெம்பர்களைக்கொண்டு அமைக்க வேண்டும். அங்கு வசிக்கக்கூடிய அதிகாரிகள் பெரும்பாலும் பவானிசாகரில் வேலை செய்து கொண்டிருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்தான். இன்னும் பார்த் தால் மின்சார நிலையம் அமைக்கப்படலாம். அது சம்பந்தமான உத்தி யோகஸ்தர்களும் ஊழியர்களும் அங்கு வசிக்க நேரிடும். ஆகவே இது சர்க்காருடைய நேரடியான கவனத்தின் கீழ் டவுன்ஷிப்பாக அமைக்கப்பட வேண்டும் என்ற அவசியம் இருந்தாலும்கூட இந்த டவுன்ஷிப் கமிட்டி முனிசிபல் ஆக்டில் இருக்கக்கூடிய அதிகாரங்களை வகிக்கக்கூடிய வசதி இருப்பதால் இந்த கமிட்டியானது தேர்தல் மூலமாக தேர்ந் தெடுக்கப்படவேண்டும். இதை உடனடியாக ஆலோசனை பண்ணி முடிவு செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே இதை கவனிக்க ஒன்று இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும். அல்லது இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். அது வரையில் இந்த ஆலோசனையை ஒத்திவைக்கவேண்டும் என்கின்ற யோசனையை நான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. தவிர இவையெல்லாம் சிரமமாக இருக்கும். அங்கு ஜனங்கள் இருக்க மாட்டார்கள் என்ற சந்தே கத்தை மந்திரி அவர்கள் சொல்லலாம். இதற்கு ஒரு உதாரணம் சொல்ல லாம். இப்பொழுது பொன்மலையில் காலனி இருக்கிறது. மத்திய சர்க்காருக்குச் சொந்தமான காலனி அது. அங்கு நிலம், கட்டடம், ரோட், லைட், எல்லாம் மத்திய சர்க்காருக்குச் சொந்தமானது. அப்படி இருந்தும்கூட அங்கே வசிக்கும் ரயில்வே தொழிலாளர்களாலே தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு கமிட்டி அந்த நிர்வாகத்தை நடத்திக் கொண்டுவருகிறது. இதை ஒரு உதாரணமாக பின்பற்றி தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பம், வியாபாரிகள், முதலியவர்கள் பவானி சாகர் கிராமங்களில் இருந்தால் அவர்கள் எல்லோரையும் வோட்டர்களாக ஏற் படுத்தி அவர்கள் மூலமாக தேர்ந்தெடுத்து ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும். தன் தலைவரை அந்தக் கமிட்டியே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அந்த உரிமையைக் கொடுத்து கமிட்டி அமைக்க வேண்டும். (P.W.D.) யின் கீழ் இருப்பதைக் காட்டிலும் இந்த முறையில் இருப்பது நல்லது என்று தோன்றுகிறது. ஆகவே இந்த யோசனைகளை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதைப் போலவே கனம் கருத்திருமன் சொன்னதுபோல் அங்குள்ள விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். அவர்களுடைய நிலங்களை சர்க்கார் எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு வேறு எங்கேயாவது நிலம் வாங்கிக் கொடுத்து உதவி செய்ய வேண்டும். இப்பொழுது எடுத்துக்கொள்ளக்கூடிய நிலங்களை பாதுகாக்க வேண் டியது அவசியம், என்பனவற்றைக் தெரிவித்துக்கொண்டு இத்துடன் என் னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

3-20 p.m. *SRI K. S. ARDHANARESWARA GOUNDER :—" கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மராமத்திலாகா மந்திரி அவர்கள் கோயமுத்தூர் ஜில்லா விலுள்ள பவானிசாகர் பிரதேசத்தில் டவுன்ஷிப் கமிட்டியை அமைக்க வேண்டுமென்பதற்காக ஒரு சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் ஆதரிக்கும் முன்பாக மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டி எவ்வாறு நடை பெற்று வருகின்றது என்கின்ற விஷயத்தை எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

"மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டி மிகவும் மோசமான நிலைமையில்தான் நடந்துவருகின்றது. அதனை நான் நேரிடையாகப் பார்க்கிறேன். அந்த டவுன்ஷிப் கமிட்டி ஆரம்பிக்கப்பட்டு பல வருஷங்கள் ஆகின்றன. இன் னும் ஒரு மெர்க்குரி லைட்கூடப் போடவில்லை. மெர்க்குரி லைட் போட-

வேண்டுமென்று அங்குள்ள மில் தொழிலாளர்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் இதுவரையிலும் போடவில்லை. அந்தக் கமிட்டியில் பெரும் பாலும் உத்தியோகஸ்தர்கள்தான் மெம்பர்களாக இருக்கிறார்கள். அவர் கள் தாங்கள் அவ்வூரில் 6 மாதத்திற்கு இருப்போமோ ஒரு வருஷத்திற்கு இருப்போமோ என்ற எண்ணத்தில் கொஞ்சம்கூட அக்கறை செலுத்து வதே கிடையாது. அங்குள்ள ஜனங்களுக்கு குடிப்பதற்குத் கூட தண் ணீர் வசதி கிடையாது. கக்கூஸ் வசதி கிடையாது. இப்படிப்பட்ட கேவல மான முறையில் அது நடந்துவரும் விஷயம் சர்க்காருக்கும் தெரிந்திருக் கும் என்று நினைக்கிறேன். கனம் நிதி மந்திரி அவர்களுக்கும் தெரியும். முன்பே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் டவுன்ஷிப் கமிட்டிகளே சரியான முறை யில் நடக்காதபோது இன்றைக்கு பவானிசாகர் டவுன்ஷிப் கமிட்டியை அமைப்பது ரொம்பவும் பொருத்தமற்றதாகும். மேட்டூர் பகுதி மக்கள் அந்த மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டியை எடுத்துவிட்டு மறுபடியும் முனிசிபா லிட்டியையே கொண்டுவரவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அதனை எப்படி எடுத்துச் சொல்வது என்றுதான் அவர்களுக்குத் தெரிய வில்லை. அதையும் கூடிய சீக்கிரத்தில் டவுன்ஷிப்பிலிருந்து முனிசிபாலிட் டியாக மாற்றிவிட்டால் கூட நன்மையாக இருக்கும். ஆகவே இப்பொழுது பவானிசாகர் டவுன்ஷிப் கமிட்டியை ஏற்படுத்த முன் வந்திருப்பது அவ்வ ளவு சரியல்ல. ஆனால் கனம் மந்திரி அவர்கள் சொல்லலாம், அந்தப் பிரதேசத்தில் மக்களே கிடையாது, சொத்துக்கள் பெரும்பாலும் சர்க்கா ருடையது, ஆகவே தான் டவுன்ஷிப் கமிட்டியை ஏற்படுத்துகிறோம் என்ப தாக. இப்பொழுது ஏற்படுத்தினாலும்கூட இன்னும் ஐந்து வருஷத்தி லாவது அதை மறுபடியும் மாற்றி முனிஸிபாலிட்டியாகச் செய்வதே நல்லது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகவே இந்த மசோ தாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு இவ்விஷயங்களை எல்லாம் நன்கு பரிசீலனை செய்வதே உசிதமென்றும், அதற்குப் பிறகு சட்டமாகச் செய் தால்தான் நல்லது என்றும் கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்ளு கிறேன்.”

* Sri M. NARAYANA KURUP :—“ Sir, as has been stated in the Statement of Objects and Reasons, this Bill is the result of the Lower Bhavani Scheme. In ancient times, townships grew around temples, but in this age of industry it is no wonder that townships spring up around river valley schemes. At this stage, I would like to impress upon the Minister that a river valley scheme brings in its train not only the problem of townships but also several other problems. Recently the Deputy Minister for Planning in the Central Government, addressing about seventy-five thousand people who had been dispossessed as a result of the execution of the Damodar Valley Project, said : ‘ Government are not satisfied with merely giving lands and money to the dispossessed; they want also to rehabilitate them to their original position.’ This means that the execution of big river valley schemes brings with it the problem of rehabilitation. Of course, the Hon. Deputy Minister's statement implied that it was the duty of the Government to give relief and rehabilitate those who had been dispossessed by such schemes in the interests of the community. But I regret to say that our Government have done nothing to provide relief or rehabilitation—let alone adequate relief or rehabilitation—to those who have been affected by such schemes. This morning a statement was made in this House that compensation was paid to the house-owners and that nothing else remained to be done by the Government. As a matter of fact, when such schemes are executed, those who get the compensation or any other benefit that is awarded for the acquisition of the land are people who are probably

[Sri M. Narayana Kurup] [7th August 1954

far away from the area. But those who are dispossessed are men on the spot and they get nothing. I believe the hon. Member who spoke a few moments before made it plain that these problems still remained in the Lower Bhavani area. Those who had been tilling the lands that have been acquired and those who had been residing in the huts or houses that have been acquired are not the persons who get the compensation. I do not want to digress and draw instances from the working of the Malampuzha Scheme. Inasmuch as this is a difficulty arising from the working of a river valley scheme, I would like to impress upon the Government that it is their duty to give as much relief and rehabilitation as possible to those thrown out of their lands and thrown out of work. While we, the people of Malabar generally, welcome the Malampuzha Scheme and the benefits it confers, our hearts bleed when we think of the ten thousand or so people who have been dispossessed and have become destitutes. About 2,497 acres of double-crop land and 1,000 acres of single crop-land have been acquired for the Malampuzha Scheme and these lands were cultivated by about four hundred verumpattam tenants and their families. Not one pie out of the compensation paid for the acquisition of these lands has gone to these verumpattam tenants who have been the tillers of the soil. We must know that a large number of agricultural labourers were employed on cultivating these three thousand odd acres of land. As a result of the storing up of the reservoir, all these people have been rendered homeless, landless and workless. (The Hon. Sri C. Subramaniam: 'We shall not take up any scheme in Malabar!') We must take up schemes. The Malampuzha river flows by the side of mountain and a hill tribe known as Adivasis are living in huts on the mountain slopes. As water rose in the reservoir, they had to climb higher and higher without any help. These are the necessary consequences, but the Government must face them and help the affected people to stand on their own legs. I regret the interruption of the Hon. Finance Minister. It does not follow from my statement that schemes should not be taken up in Malabar or anywhere else. It means that schemes should be taken up but that the evils should be remedied."

* Sri K. VINAYAKAM :—" Sir, I have gone through the Statement of Objects and Reasons for constituting a Township Committee for the Bhavanisagar area. (The Hon. Sri C. Subramaniam: 'Has the hon. Member visited the Bhavanisagar area?') I have not visited the area. The object of this Bill is to provide facilities for the residents and to control the area by the officials living in that area. We generally disagree with the method of constituting the Committee. Members of the Township Committee are nominated instead of being elected. I want to throw a small suggestion before the Government concerning a different area which also needs immediate attention by the Government of Madras. I am referring to the village known as Mamallapuram, familiarly known as Mahabalipuram, a sea-shore village in Chingleput district. This place has been attracting visitors and tourists from all over the world. It is famous for the Pallava

7th August 1954] [Sri K. Vinayakam]

school of sculpture. It contains works of historical importance: there are stone carvings and temples carved out of a single stone which are a standing monument of the high level of sculpture that has been attained in South India.

(At this stage Mr. Speaker occupied the Chair.)

" This has been there uncared for for the past seven centuries though the Protector of Ancient Monuments is the officer who has been put in charge of the area. I know I am digressing from the subject on hand, but I am arguing why a township should not be constituted for this area which attracts plenty of tourists from all over the world. Recently, there has been a suggestion to open a Tourist Home in that area. The Hon. Ministers in charge of Finance and Public Works have inspected the area and have selected a spot also for the purpose. The point I am driving at is that it is a centre which attracts international personages and which needs to be taken due care of by the Government of Madras. The local people are not in a position to improve the locality with the result that it is in a very dilapidated condition. I request the Government to come forward with another Bill to constitute a township for Mahabalipuram at least in the next session." 3-30 p.m.

* DR. K. B. MENON :—" Mr. Speaker, I wish to view the whole problem purely from the point of view of self-Government. It seems that the Government are interested in having townships in a number of places. This is the second Bill that they are introducing and the second effort that they are making in order to constitute townships. A township was sought to be constituted for Courtallam on the ground that the place was a sanatorium and that the Government should have control over it so that it might be made attractive for tourists. The Government have a township in Mettur where there is a dam and I had occasion very recently to visit Mettur and see how that township was being administered. The township in Mettur, as I have seen it, is a disgrace. It has an income of Rs. 2 lakhs and a population, I believe, of over 25,000. The condition of the roads is disgraceful. The living quarters of the workers are not worth human habitation. The President of the Township is the Executive Engineer who knows nothing about public life and who does not understand the people. If this is a sample of a township, I feel that there should be no townships at all. When we have panchayats and local self-Government, I do not see any reason why the Government should have the power to nominate committees and have control over the townships. If the method of constituting townships is liberalized like that of panchayats, municipalities or corporations and if all the members of the Township Committee are elected, I certainly have no objection to the constitution of townships. I, therefore, feel that the Government should not make it a policy to constitute townships where there are hydro-electric installations or where there are tourist centres. Such places should not be controlled by the Government through township committees. They should be administered by elected municipalities over which the people would have control, and the Government may help them with advice and guidance."

[7th August 1954

3–34 p.m. * **Sri A. RATNAM** :—" கனம் சபாநாயகர் அவர்களே, பவானிசாகர் டவுன்ஷிப் கமிட்டி மசோதாவைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்புகுமுன் இன்றையதினம் ஆட்சியாளர்களால் ஜனநாயகம் எப்படி சீரழிக்கப்படுகிறது என்பதை வருத்தத்துடன் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஜனநாயகமுறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு நடைபெற்றுவரும் தொப்பம்பாளையம், குடுவாய் போன்ற பஞ்சாயத்துகளில் இருக்கும் பிரதேசங்களை ஒன்றாகச் சேர்த்து இவைகளுக்கு பவானிசாகர் டவுன்ஷிப் கமிட்டி நிறுவ உத்தேசித்திருக்கிறார்கள். அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்படும் இக்கமிட்டியில் 6 மெம்பர்கள் இருப்பார்கள். இவர்கள் அந்தப் பிராந்திய நிர்வாகத்தில், குறிப்பாக ரோடுகள் போடுதல், தண்ணீர் வசதி, சுகாதார வசதி, விளக்கு வசதி போன்றவைகளை செய்து வருவார்கள். இந்தக் கமிட்டியில் உத்தியோகப்பற்றற்றவர்கள் இரண்டு பேர்கள் இருப்பார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கார் நியமிக்கப்போகும் இந்த அதிகாரிகள் வேறு நாட்டிலிருந்து இங்கே வந்துவிடப்போவதில்லை யென்றாலும்கூட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டே இதன் நிர்வாகத்தை நடத்துவதுதான் சரியானதாகும். அந்தப் பிரதிநிதிகள் பணத்தை எந்த வகையிலும் துர்வினியோகம் செய்ய வழியேகிடையாது. ஏனென்றால் எந்தத் திட்டத்தைப் போட்டாலும் அந்தத்திட்டத்தை சர்க்கார் அங்கீகரிக்கும்முன் அவைகளை அமுலுக்குக் கொண்டுவரும் அதிகாரம் அவர்களுக்குக் கிடையாது. ஆகவே ஜனநாயகம் நாட்டில் இருக்கவேண்டுமென்று விரும்பும் என் போன்றவர்களின் ஆசை அந்த ஆட்சி அதிகாரத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின்பால் கொடுக்க வேண்டுமென்பதே யாகும். எனவே டவுன்ஷிப்கமிட்டியை நியமித்தாலும்கூட இதன் அங்கத்தினர்கள் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்படுவதற்குப் பதிலாக மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருத்தல் நலமென்று கருதுகிறேன். அது ஜனநாயக முறைப்படி இருக்குமென்றும் நம்புகிறேன். மேலும் இந்தக்கமிட்டியில் 6 பேர்களில் உத்தியோகப்பற்றற்றவர்கள் இரண்டு பேர்கள் தான் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உத்தியோகப் பற்றற்றவர்கள் குறைந்தது மூன்று பேர்களாவது இருக்கும்படியாகச் செய்வதும் முக்கியமாகும். பொதுவாக, இந்த மசோதாவில் பல திருத்தங்கள் செய்யப்படவேண்டியிருக்கிறது. அந்தத் திருத்தங்களையெல்லாம் சர்க்கார் கொண்டுவரவேண்டியது ரொம்பவும் அவசியமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்."

3–40 p.m. * **Sri K. V. RAMASWAMY** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டவுன்ஷிப் கமிட்டியானது அங்கு இருக்கக்கூடிய மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் சர்க்காரால் நியமிக்கப்படவேண்டும் என்பதை மாத்திரம் நான் எதிர்க்கிறேன். இது ஜனநாயக சகாப்தம். எதுவும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சபையோ அல்லது ஸ்தாபனமோதான் நாட்டை நிர்வகிக்க வேண்டுமென்கிற மனப்பான்மை வளர்ந்துவரக்கூடிய காலம் இது. சின்னஞ்சிறு கிராமங்கள் முதல் நகரபரிபாலனம் வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட வழக்கம் சின்னஞ்சிறு கிராமங்கள் முதல் பெரிய நகரங்கள் வரையில் இருந்துவரும்போது, பவானிசாகரம் டவுன்ஷிப் கமிட்டியானது சர்க்காரால் நியமிக்கப்படவேண்டும் என்பதாக இந்த மசோதாவில் கூறப்படுகிறது. அதேசமயத்தில் இந்த மசோதாவைப் பிரேரிக்கும் போது, ' இந்த பவானிசாகரம் டவுன்ஷிப் கமிட்டியானது மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டியை முன்மாதிரியாகக் கொண்டதாக இருக்கும் ", என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். மேட்டூரிலிருந்து சமீபத்தில் திரும்பிவந்துள்ள கனம் டாக்டர் கே. பி. மேனன் அவர்கள் மேட்டூர் டவுன்ஷிப் இருக்கும்படியான நிலைமையை எடுத்துச் சொல்லியதையும் நாம் கவனிக்கவேண்டும். அந்த டவுன்ஷிப் கமிட்டியின் நிர்வாகம் எவ்வளவு மோசமாக இருக்கிறதென்பதை அவர் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார். தமிழ்நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு உதவிகரமாக மேட்டூர் அணை இருக்கிறது. ஏராளமான தண்ணீர் அதில் தேங்குகிறது. ஆனால், அங்கு இருக்கும்படி

7th August 1954] [Sri K. V. Ramaswamy]

யான தொழிலாளிகளும் இதர மக்களும் அங்கு என்ன நிலையில் இருக்கிறார்கள் என்று பார்த்தால், அவர்களுக்குத் தண்ணீர் வசதியோ மற்ற எந்தவிதமான சுகாதார வசதியோ கிடையாது. பல இடங்களுக்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய அந்த மேட்டூர் அணைக்கட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்கள் குடிதண்ணீர்வசதி கூட இல்லாமலிருப்பதற்குக் காரணம் என்ன ? அங்குள்ள டவுன்ஷிப் கமிட்டியின் கவனக்குறைவுதான் என்று சொல்லத் தேவையில்லை. சுகாதார வசதியைப் பார்த்தாலும் சரி அங்கு மிகமோசமாக இருக்கிறது. அங்குள்ள கக்கூஸ் மோசமாகவும் நரகத்திற்கு ஒப்பாகவும் இருந்தது. அவ்வளவு அநாகரீகமாக அது வைக்கப்பட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் வாழும்படியான அந்த இடத்தில் கக்கூசுகள் இவ்வளவு மோசமான நிலையில் இருந்தால், அவர்கள் எப்படி ஆரோக்யமாக வாழமுடியும் ? அங்கிருக்கக்கூடிய மக்கள் குடிதண்ணீர் வசதியின்றி, சுகாதார வசதியின்றி மிக அலட்சியப்படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம் அங்கிருக்கக்கூடிய டவுன்ஷிப் கமிட்டியின் கவனக்குறைவுதான். அந்தக் கமிட்டியானது அங்குள்ள ஜனங்களுக்குப் பொறுப்பாளிகள் அல்ல. ஏனென்றால் அவர்கள் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்கள். ஜனங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாகவும், ஜனங்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருப்பவர்களாகவும் இருந்தால், நிச்சயமாக அந்த டவுன்ஷிப் கமிட்டியானது இதை கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்யும். ஆகவே, இத்தகைய டவுன்ஷிப் கமிட்டி, சர்க்காரால் நியமிக்கப்படவேண்டும் என்பதை நான் ஆட்சேபிப்பதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்தான் அதனுடைய நிர்வாக அதிகாரியாக இருக்கவேண்டும், சர்க்கார் நிர்வாக அதிகாரி கூடாது என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.''

* THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—'' Mr. Speaker, Sir, the various hon. Members who have spoken on this measure have expressed great dissatisfaction at the way in which the township is to be introduced. Sir, I have, in my statement, clearly expressed the view that this area is essentially a Government colony for the present. When a number of non-officials get settled in that area we can think of entrusting the administration to a non-official body. Until then, we must have a township there. With this object only, I have come forward to seek the leave of the House to make it into a township. I concede that it is only for the sake of administrative convenience, a township has been proposed on a temporary basis. I do not for a moment claim that this is *the* method to administer the area, especially in the age of democracy, in which people's representatives have to be at the helm of affairs in such matters. That is why I cannot resist with emphasis the view expressed by hon. Members that the area should be administered by people's representatives. For want of time, I only plead that this Bill may be ushered in as a temporary measure. There is already another township in existence and about which also there were not many good things said now. If people have been thinking of a township of Courtallam, I should say that it is a different matter. Anyway, if the township of Courtallam could be tolerated, I only plead hard that this township could also be tolerated. As I have already pointed out, this is only a temporary measure brought forward for administrative convenience. The Executive Engineer is there. However, the Government do not take control immediately. The two panchayats need not have jurisdiction over this area. I have already referred to this matter in my statement.

"Hon. Member Sri Karuthiruman who spoke on the Bill referred to various 'drawbacks' and various 'injustices,' as he called them. He said that some of the ryots have been dispossessed and have not been given facilities to cultivate the lands that may fall within the proposed township. I concede that this question and other questions like the payment of adequate compensation, etc., will have to be carefully looked into.

"Hon. Member Sri Narayana Kurup also referred to the case of the so-called 'dispossessed ryots.' I only wish to point out that when a big measure like this is being ushered in there are likely to be many drawbacks and all of them have to be looked into. I do concede that they will have to be looked into. I would only like to say that the question of compensation and other matters will be attended to by this body as well. The Government will give instructions to this Committee to look into all those grievances and to set right hard cases that deserve consideration. Therefore, I only plead before this House and request the hon. Members to approve this measure which has been brought forward on a temporary basis. Let them give us time to revise our policy as a whole in this matter, if necessary, and to see whether we can do away with townships if it should be necessary, and bring forward a comprehensive measure which will be acceptable to all concerned and which will fit in with the democratic set-up. This is all I can say in defence with reference to the various criticisms offered by the hon. Members who have spoken on the Bill. I request the House to pass this Bill with tolerance. I would remember every word that has been said on the floor of the House. I shall try to bring in reformation on the existing state of affairs. With these words, I appeal to the hon. Members to take this Bill into consideration. Let us carry on for the present and take time to improve matters in course of time. Thank you, Sir."

MR. SPEAKER :—"The question is—

'That the Bhavanisagar Township Bill, 1954, be taken into consideration at once.'"

The motion was put and carried.

Clause 3.

SRI M. KALYANASUNDRAM :—"Sir, I move the following amendment standing in my name :—

'For *the existing sub-clauses* (1) *and* (2), substitute *the following* :—

"(1) *For the purpose of administering the municipal affairs of the Bhavanisagar Township, a committee to be called the Bhavanisagar Township Committee (hereinafter referred to as Township Committee) consisting of eight members shall be constituted once in three years through election from among the employees and the local population.*

7th August 1954] [Sri M. Kalyanasundram]

(2) *One of the members of the Township Committee shall be elected as its Chairman.*" ' "

SRI P. RAMAMURTHI :—" I second the amendment, Sir."

SRI K. V. RAMASAMY :—" Sir, I move the following amendment standing in my name :—

' For *the existing sub-clause* (1), substitute *the following* :—

" (1) *For the purpose of administering the municipal affairs of the Bhavanisagar Township, a committee to be called the Bhavanisagar Township Committee consisting of six members shall be elected by the employees and the local people.*" ' "

SRI T. S. ARDHANARI :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move the following amendment standing in my name :—

' *In sub-clause* (1), for *the words* " *consisting of six members . . . non-officials* ", substitute *the words* " *consisting of seven members who shall be elected by the adult inhabitants of the area having right to franchise under the Township* ". ' "

SRI P. VENKATESHA SHOLAGAR :—" I second the amendment, Sir."

SRI A. RATNAM :—" Sir, I move the following amendment standing in my name :—

' *In sub-clause* (1)—

" (*a*) for *the words* ' *six members* ' *occurring in lines* 7 *and* 8, substitute *the words* ' *seven members* '.

(*b*) for *the word* ' *two* ' *occurring in the last line*, substitute *the word* ' *three* '." ' "

SRI K. VINAYAKAM :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move—

' *In sub-clause* (1)—

" (*a*) for *the word* ' *six* ' *occurring in lines* 7 *and* 8, substitute *the word* ' *seven* '.

(*b*) for *the word* ' *two* ' *occurring in the last line*, substitute *the word* ' *four* '." ' "

SRI K. V. RAMASAMY :—" I second the amendment, Sir."

SRI K. V. RAMASAMY :—" Sir, I move—

' For *the existing sub-clause* (2), substitute *the following* :—

" (2) *One of the members of the Township Committee shall be elected to be its Chairman by the members.*" ' "

[7th August 1954

SRI P. VENKATESHA SHOLAGAR :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move—

' For *the existing sub-clause* (2), substitute *the following* :—

" (2) *The State Government shall take steps—*

' (*a*) *to elect a Chairman of the Township Committee from among its members; and*

(*b*) *an Executive Officer (not being a member of the Township Committee) shall be appointed by the Township Committee, if it so thinks, in consultation with the State Government.*' " ' "

SRI M. KALYANASUNDRAM :—" I second the amendment, Sir."

MR. SPEAKER :—" Clause 3 as well as all the amendments are before the House for discussion."

SRI M. KALYANASUNDRAM :—" Are we not considering the Bill clause by clause? "

MR. SPEAKER :—" Yes. We have taken up Clause 3 for discussion. All these amendments are to that clause."

3-50 p.m. SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, மந்திரி அவர்கள் கொடுத்த உறுதிமொழிக்குப் பிறகும்கூட இந்தத் திருத்தத்தைப் பிரேரிக்கவேண்டிய அவசியம் இருக்கிறதென்றுதான் நான் கருதுகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு கமிட்டியை நியமிப்பதில் எந்தவிதமான கஷ்டங்கள் இருப்பதாகவும், அதற்குள்ள காரணங்கள் என்னவென்பதையும் மந்திரி அவர்கள் எடுத்துக் கூறவில்லை. அவகாசம் போதவில்லை என்று மந்திரி அவர்கள் சொல்லலாம். இத்தனை வருஷகாலமாக இந்தபிரதேசம் நிர்வாக அதிகாரியின் நேரடியான நிர்வாகத்தின்கீழ் இருந்து வந்திருக்கிறது. இன்னும் ஆறு மாதகாலம் அவகாசம் எடுத்துக்கொண்டு விரிவான மசோதாவைக் கொண்டுவரலாம் அப்படிச் செய்வதில் எந்தவிதமான கஷ்டமும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. டவுன்ஷிப் என்ற வார்த்தைக்கே அருவருப்பு ஏற்படக்கூடிய முறையிலே மேட்டூர் டவுன்ஷிப்பின் நிர்வாகம் இருந்துவருகிறதென்பதைப் பற்றி பல அங்கத்தினர்கள்—சர்க்கார்த் தரப்பு அங்கத்தினர்கள் உட்பட—பேசியதை மந்திரி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் என்று சொல்லக்கூடிய காலத்தில் உயர்தர அதிகாரிகளாகவே நியமிக்கப்படுகிறார்கள். உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்கள் என்று சொல்லும்போது யாராவது இரண்டு கண்டிராக்டர்கள்—அதிலும் எக்ஸிக்யூடிவ் இன்ஜினீருக்கு வேண்டியவர்களாகப் பார்த்து—நியமிக்கப்படுவார்கள். மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் கிட்டத்தட்ட அப்படித்தான் இருக்கிறார்கள். டவுன்ஷிப் கமிட்டியில் நியமனம் வேண்டுமென்பதற்காக கண்டிராக்டர்கள் கதர் சட்டை போட்டுக்கொள்வார்கள். காங்கிரசிலே சேர்ந்து கமிட்டியில் அங்கத்தினர்களான சில கண்டிராக்டர்களை நான் பார்க்கக்கூடிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. அப்படிப்பட்ட டவுன்ஷிப் கமிட்டியானது உண்மையிலேயே மக்களுடைய பிரதிநிதியாக இருந்து, ஜனங்களுடைய குறைகளைத் தீர்க்கக்கூடிய கமிட்டியாக இருக்கமுடியாது. ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்று

7th August 1954] [Sri M. Kalyanasundram]

கொள்ளவேண்டும். இதை அமுலுக்குக் கொண்டுவர அவகாசம் வேண்டுமென்றால் ஆறு மாத காலம் வேண்டுமானாலும் இந்தச் சபை அனுமதிக்கலாம். சட்டமியற்றக்கூடிய காலத்தில் செவ்வையாகச் செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, என்னுடைய திருத்தத்தை நான் பிரேரித்திருக்கிறேன்."

SRI P. RAMAMURTHI :—"இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். இந்த மசோதாவின் அடிப்படையான போக்குக்கு எதிராக இந்த அசெம்பிளியில் கிளப்பப்பட்ட குரல்கள்—எல்லாப் பகுதிகளிலிருந்தும் எதிர்ப்புகள் கிளப்பப்பட்டன—எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தும் கனம் மந்திரி அவர்கள் பிரசங்கத்திற்குப் பிறகு, அதை எதிர்த்துப் பேசுவது கஷ்டமாக இருக்கிறது. இருந்தபோதிலும்கூட அவர் ஆரம்பத்தில் கொடுத்திருக்கக்கூடிய காரணங்களைப் பார்த்தால் அவருடைய பதில் அவ்வளவு தூரம் சரியானதாக இருக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 3·53 p.m.

